பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை (28-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:154

# ஈழத்துக்கு மாற்றீடான அரசியல் தீர்வு அது குறித்தே தாய்லாந்தில் பேச்சு!

## மல்வத்த பீடாதிபதியிடம் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28

நாட்டைப் பிரிக்காமல் அதிகாரப் பரவலாக்கல்மூலம் ஈழத்துக்கு மாற்றீடான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காகவே தாய்லாந்தில் புலிகளுடன் ஒரே மேசையில் அமர்ந்து பேசப் போகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுக் கண்டியில் மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெவ விபஸி தேரரைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேரரிடம் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது விடுதலைப் புலிகளுடன் அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தம் மட்டுமே செய்துகொண்டுள்ளது. இதனை இரு அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தமாக சிலர் விஷமப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

நாட்டில் இன்று ஓர் அரசு மட்டுமே இருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்குத் தவிர்ந்த வேறு எப்பகுதியிலும் தமது அரசியல் அலுவலகங்களைப் புலிகள் திறக்கமுடியாது.

புலிகள் கொழும்பிலும் நாட்டின் வேறு பகுதிகளிலும் தமது அலுவலகங்களைத் திறக்கப் போகின்றார்கள் என்று வெளியான செய்திகளில் உண்மையில்லை.

இந்த அரசு நாட்டில் நிலையான சமாதானத்தைக் கொண்டுவரும். அதற்கு நீங்கள் அனைவரும் முழு ஆதரவு தரவேண்டும் - என்றார் பிரதமர்.

இதற்குப் பதிலளித்த பீடாதிபதி தெரிவித்ததாவது:-

"சமாதான முயற்சிகளுக்கு நான் பூரண ஆதரவு தருகின்றேன். ஆனால், நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும்" - என்றார். (ம-6-9)

## சமாதான முயற்சிகள் குறித்து ஆராய



# சந்திரிகா - ரணில் விரைவில் சந்திப்பு!



## புலிகள் மீதான தடைநீக்க விவகாரம் முக்கியமாகக் கலந்துரையாடப்படும்

கொழும்பு,ஏப்ரல்28

**தமது ஐந்து நாள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அடுத்த ஓரிரு தினங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்துப் பேசுவார்.**

**அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக் குறித்து - குறிப்பாக புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் குறித்து - இருவரும் விரிவாக ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

முக்கிய அரசியல் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் சந்திந்துப்பேசவிருப்பதை ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் உறுதி செய்தன.

கடந்த 22ஆம் திகதி இந்தியா புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, ஜனாதிபதி குமாரதுங்க கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக தமது நிலைப்பாடு பற்றிய சில தகவல்களை ஜனாதிபதி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் தொடராகவே தற்போது ஜனாதிபதி, பிரதமருடன் நேரில் பேசுவார் என அந்த வட்டாரங்கள் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜப்பான் எம்.பிக்கள் குழு இலங்கை வந்தது

கொழும்பு,ஏப்.28

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானத் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று நேற்று கொழும்பு வந்துசேர்ந்தது.

3 நாள்களுக்கு இங்கு தங்கியிருக்கும் இக்குழுவினர் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உட்பட அரசின் உயர்மட்டத் தலைவர்கள் பலருடனும் பேச்சு நடத்த உள்ளனர்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் தொடர்பாக இந்தக் குழு விரிவாக ஆராயும். (ம)

முச்சந்தி முரளி



அமைதிக் காலத்திலையும் சாப்பிட்டு விட்டு அமைதியாய் இருக்கிற கொடுப்பினை உவை சீருடைக்காரருக்கு இல்லைப் போல பாருங்கோ....!

# புலிகளின் மீதான தடையை பிரிட்டன் விரைவில் நீக்கும்?

லண்டன்,ஏப்.28

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பிரிட்டன் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளில் புலிகள் முழு ஈடுபாடு காட்டுவதனாலும் -

அரசுடனான சமாதானப் பேச்சுக்களில் அவர்கள் கலந்துகொள்ள இருப்பதனாலும் -

விடுதலைப் புலிகளைத் தொடர்ந்தும் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் வைத்திருக்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாக பிரிட்டிஷ் அரசு கருதுகின்றது.

"புலிகள் தமது பயங்கரவாதச் செயல்களையும் தாக்குதல் நடவடிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா யோசப் முகாமில்

## உணவில் நச்சுத்தன்மை: 205 படையினர் பாதிப்பு!

வவுனியா,ஏப்.28

வவுனியா யோசப் இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு நேற்றுக் காலை வழங்கப்பட்ட உணவில் நச்சுத் தன்மை காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், 205 இராணுவத்தினர் பாதிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை வழங்கப்பட்டது. கடும் பாதிப்புக்குள்ளான 16 துருப்பினர் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் தங்க வைக்கப்பட்டு சிகிசசைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

உணவு அல்லது நீரில் ஏற்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்கு எதிராக தெற்கில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள்!

### எதிர்க்கட்சிகள் தயாராகுகின்றன

கொழும்பு,ஏப்.28

விடுதலைப் புலிகளுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயறசிகளை உடனடியாக நிறுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக முக்கிய எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டு வருகின்றன என்று சில செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

இந்தக் கட்சிகளின் முதலாவது

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மட்டு. அரசியல் பிரமுகர் விசேட அதிரடிப் படையால் கைது!

மட்டக்களப்பில் இர்ாணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் துரை நேற்று விசேட அதிரடிப் படையினரால் திடீரெனக் கைது செய்யப்பட்டார்.

மண்டூரில் இருந்து கொக்கட்டிச் [illegible] போது இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் கைதுசெய்யப்பட்ட சமயம் இவரிடம் ஒலிப்பதிவு நாடாக்கள், இராணுவச் சீருடை, இராணுவப் பாதணி, தடைசெய்யப்பட்ட கத்தி, இராணுவக் குறிப்புப் புத்தகங்கள், 3ரவைகள் என்பன இருந்ததாக மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் சிசிர குணவர்த்தன தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட துரை நேற்றிரவு காத்தான்குடி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அநேகமாக இன்று அவர் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் என்று மட்டக்களப்புப் பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பட்டாசுகள் இங்கு வந்ததை அடுத்து விஷமிகள் அட்டகாசம் கட்டுமீறுகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.28

நீண்ட கால இடைவெளியின் பின்னர் குடாநாட்டுக்கு பட்டாசு போன்ற வெடிபொருள்கள் தற்போது தாராளமாக எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப் பட்டாசுகளை வாங்கும் ஒருசில விஷமிகள் வீதிகளில் நின்று வேண்டத்தகாத பல செயல்களில் ஈடுபட்டுவருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சைக்கிள்களில் செல்லும் யுவதிகள் மீது ஒருசில விஷமிகள் பட்டாசுகளைக் கொளுத்தி வீசுகின்றனர். இதேபோல் வயோதிபர்கள் மீதும் விஷமிகளின் சேஷ்டைகள் கட்டுமீறிச் செல்கின்றன.

சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் மீது பட்டாசு கொளுத்தி வீசப்பட்டதால் அவர் அதிர்ச்சியில் மயக்கமடைந்து நிலத்தில் வீழ்ந்த சம்பவம் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் வீதிகளால் செல்லும் போது பட்டாசுகளைக் கொளுத்தி வீடுகளுக்குள்ளும் எறிகிறார்கள்.

இதேவேளை -

இராணுவ முகாம்களுக்கும் ஒரு சில விஷமிகள் பட்டாசுகளை கொளுத்தி வீசிவிட்டு தலைமறைவாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஆத்திரமடையும் படையினர் அந்த வீதியால் சென்று வருபவர்களை மிரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. (ம-6-8-9-51-117)

## அமைச்சர்கள் - பிரபா சந்திப்பு ஒற்றுமையைப் பலப்படுத்தியது

### அலிக் அலுவிகார பாராட்டு

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடியதில் எந்த விதமான தவறும் இல்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார.

நேற்றுமுன்தினம் மானம்பிட்டியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:-

கடந்த 19 வருடங்களாக நாட்டில் நடைபெற்றுவரும் கொடிய யுத்தத்தினால் மக்கள் அனைவரும் களைத்துவிட்டார்கள். இதனால் அனைவரும் தற்போது சமாதானத்தையே விரும்புகின்றனர்.

எனவே சமாதானத்துக்கு தடையாகவுள்ள சந்தர்ப்பவாதிகளுக்கு மக்கள் எவரும் துணைபோக மாட்டார்கள்.

அமைச்சர்கள் சிலர் அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடியதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சிக்கின்றன.

அமைச்சர்களும் பிரபாகரனும் ஒருவரை ஒருவர் நட்புணர்வுடன் சந்தித்து கலந்துரையாடியதில் எந்த விதமான தவறும் இல்லை.

ஒருவருக்கொருவர் மனக்கசப்புடன் இருந்துவந்த தமிழ் - முஸ்லிம் மக்கள் இந்தச் சந்திப்பினால் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் இருக்கின்றார்கள்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

### லங்கா சிமெந்து நிறுவன

## தொழிலாளர்கள் போராட்டம் ஒரு மாதமாகத் தொடர்கிறது

வலிகாமம்தெற்கு,ஏப்.28

லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்கள் நடத்திவரும் மறியல் போராட்டம் சுமார் ஒரு மாதகாலமாகத் தொடர்ந்து வருகின்றது.

இவர்களது போராட்டத்துக்கு பல பொது அமைப்புகள் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன.

கியூடெக் நிறுவன இயக்குநர் வண.ஜெயக்குமார் அடிகளார் நேற்று தொழிலாளர்களுடன் இணைந்து போராட்டத்தில் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு ஆதரவும், ஆறுதலும் கூறிச் சென்றுள்ளார்

மனிதநேய அமைப்பின் ஒன்றிய தலைவர் மற்றும் பல தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர். (ம-152)

## சாவகச்சேரி மருத்துவமனையில் மீண்டும் வெளிநோயாளர் பிரிவு

### நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சர் பணிப்பு

வடமராட்சி,ஏப்.28

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை வாரத்தில் மூன்று தினங்கள் இயக்குவதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் பி.பி.தயாரத்ன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறபபித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் யாழ்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் தயாரத்ன மேற்படி வைத்தியசாலைக்கு விஜயம் செய்ததுடன், அங்கு நிலவும் குறைபாடுகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் சாவகச்சேரி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்துக் கேட்டறிந்த அமைச்சர், தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து முதற்கட்டமாக வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (எ-173-118)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.28

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ஆலய பங்குத் தந்தை வணபிதா ஜெபநேசரட்ணம் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெறும். கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும், புனிதரின் திருச்சொரூப ஆசியும் இடம்பெறும்.

நாளை மறுதினம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெறும். (எ-51)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.28

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மணவாளக்கோல விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

விசேட பூசை அபிஷேகம் திருவூஞ்சல் என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் வெளிவீதியுலா வருதலும் இடம்பெறும். (எ)

☆ ☆ ☆

சுதுமலை புனித யூதாததேயு ஆலய வருடாந்தத் திருவிழாவின் இறுதிநாளான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி திருச்சொரூப பவனி, சொரூப ஆசர் என்பன இடம்பெறுகின்றன.

### சமூக தீபம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்,28

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தின் 'சமூக தீபம்' என்ற நூலின் வெளியீட்டு விழாவும், கௌரவிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஐயனார் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி ஆ.சிவபாதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ)

### அநாதரவாக கிடந்த சைக்கிள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.சத்திரத்துச் சந்திக்கு அருகில் கே.கே.எஸ். வீதியில் கடந்த இரண்டு நாள்களாக அநாதரவாகக் காணப்பட்ட லுமாலா சைக்கிள் ஒன்று யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் யாழ்பொலீஸ் நிலையத்திற்கு வந்து அதனை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

### நகரப் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

## மக்களை விழிப்புடன் இருக்குமாறு கோருகின்றார்கள் யாழ். பொலீஸார்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.நகரப் பகுதியில் நாளுக்கு நாள் திருட்டுகள் அதிகரித்து வருவதால் பொதுமக்களை மிகவும் விழிப்புடன் அவதானமாக இருக்குமாறு யாழ்.பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இரவில் படுக்கைக்கு செல்வதற்கு முன்னர் வீட்டின் கதவுகள் மற்றும் யன்னல்கள் என்பவற்றை நன்றாகப் பூட்டி சரிபார்த்துக்கொள்ளுமாறும் பொலீஸார் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

நாளுக்கு நாள் பல திருடர்கள் தம்மிடம் பிடிபடுவதாகவும் -

மேலும் சிலரை தாம் தேடி வருவதாகவும் -

அவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் தமது பகுதிகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் யாராவது நடமாடியதைக் கண்டால் உடனடியாகப் பொலீஸாருக்கு தகவல் கொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-4)

### இளவாலையில் கலைப்பாலம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பால இறுதிநிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக மூவினக் கலைஞர்களும் பங்குகொள்ளும் 'தரிசனம்' என்ற மௌன நாடகம் இடம்பெறவுள்ளது அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக கலாமன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-8)

### பலாலி ஆசிரிய கலாசாலை மாணவருக்கு!

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9மணிமுதல் கலாசாலையில் வைத்து வழங்கப்படும் என கலாசாலை அதிபர் கே.சதாசிவமூர்த்தி அறிவித்துள்ளார்.

ஏற்கனவே நடைபெற்ற இரண்டாம் வருட விஞ்ஞானம், விவசாயம், உடற்கல்வி (பொது) ஆகிய பாட நெறிகள் மற்றும் உடற்கல்விச் செயன்முறைப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றத் தவறியவர்களும் நாளை செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ)


## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய பரிசளிப்பு விழாவும் பாராட்டு விழாவும்

*இடம்:* ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய முன்றில்
*காலம்:* நாளை (29.04.2002) திங்கட்கிழமை மாலை 4மணி
*பிரதம விருந்தினர்:* திரு.இ.த.விக்னராஜா
*(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)*
*கௌரவ விருந்தினர்கள் : தவில் கலைமாமணி*
திரு.க.கணேசபிள்ளை அவர்கள்
*பிரபல சொற்பொழிவாளர்*
திரு.கு.பாலசண்முகன் அவர்கள்

தவில் கலைமாமணி திரு.க.கணேசபிள்ளை அவர்களை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தினர், ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தினர் ஆகியோர் பாராட்டிக் கௌரவிப்பர். கம்பராமாயண தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய திரு.கு. பாலசண்முகன் அவர்களை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தினர் பாராட்டிக் கௌரவிப்பர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- நிலையத்தினர்.

(3270)


## கண்ணீர் அஞ்சலி

யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை முன்னாள் அதிபரும் எமது நண்பருமாகிய

### க.கணேசு

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விளையாட்டுத்துறை நண்பர்கள்,
யாழ். கல்வி வலயம்.

(C/21956)

## கண்ணீர் அஞ்சலி

நயினையின் தவப்புதல்வரும், யாழ்/ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபருமான

### கந்தவனம் கணேசு

அவர்கள் அமரத்துவம் எய்திய செய்திகேட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி ச.ஜெயராசா *(அதிபர்)*
திருமதி மா.வேதநாதன் *(அதிபர்)*
செல்வி எஸ்.வஸ்தியாம்பிள்ளை *(அதிபர்)*
திரு.சி.சோமேஸ்வரபிள்ளை *(அதிபர்)*
திரு.எஸ்.சிவபாதசேகரம் *(அதிபர்)*
திரு.வே.ஞானகாந்தன் *(அதிபர் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)*
திரு. அ.ஜெயரட்ணம் *(அதிபர்)*

(C/21955

## கண்ணீர் அஞ்சலி

இராமநாதன் நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் **செல்வி பாக்கியலக்சுமி நடராஜா** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னலக்சுமி நடராஜா

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த வேதனை அடைவதோடு அன்னாரின குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கவின்கலை மன்றம்,
*யாழ். பல்கலைக்கழகம்* இராமநாதன் நுண்கலைத்துறை.

(C/21958)

## கண்ணீர் அஞ்சலி

நு/ஹெலன்ட்ஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியரும்,
கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி முன்னாள் பிரதி அதிபரும்,
எமது குடும்ப நண்பருமாகிய

### பொ. இராமலிங்கம்

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது குடும்பத்தினரின் துயரத்தில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

த.அருணகிரிராஜா குடும்பத்தினர்
கம்பர்மலை உடுப்பிட்டி.

(C/21957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனிய பாடசாலை ஒன்றில் மாணவன் சுட்டதில் 17பேர் பலி!

எர்வேற்,ஏப்.28

ஜேர்மனியில் உள்ள ஒரு பாடசாலையின் பழைய மாணவன் ஒருவனால் 17பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து பல ஐரோப்பிய நாடுகளில் துப்பாக்கிப் பாவனைச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

எர்வேற் நகரில் உள்ள 'ஜோகன கரன்பேர்க்' பாடசாலைக்குள் நேற்று முன்தினம் புகுந்த அந்தப் பாடசாலையின் பழைய மாணவன் ஒருவன் தான் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சுட்டதாகவும் -

இதில் 13ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகி ஒருவர், இரு மாணவிகள் மற்றும் ஒரு பொலீஸ் அதிகாரி ஆகியோர் உயிரிழந்ததாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

அரைமணித்தியால இடைவெளியில் நடந்து முடிந்துவிட்ட இந்தச் சம்பவத்தின் முடிவில் 19 வயதான அந்தப் பழைய மாணவன் தான் வைத்திருந்த துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

'இரத்தக் குளிப்பு' என்று வர்ணிகக்கப்படும் இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களது நினைவாக நகரின் மையப் பகுதியில் உள்ள புனித அன்ரூஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையில் இறந்தவர்களது உறவினர்கள் தவிர்ந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் எவ்வித முன்னேற்பாடின்றி பங்கேற்றமை, இந்தச்சம்பவம் ஏற்படுத்திய தாக்கத்தை எடுத்துக்காட்டுவதாகக் கருதப்படுகிறது.

ஜேர்மனிய அரசின் சட்ட அமைப்புக் குழுவினர் ஆயுதப் பாவனைச் சட்டத்தை கடுமையாக்கும் ஒரு பிரேரணையை அங்கீகரித்ததற்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்பாக இந்தப படுகொலைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தச்சம்பவம் ஐரோப்பிய நாடுகளில் ஆயுதப் பாவனைச் சட்டங்கள் குறித்து பலத்த விவாதங்களை கிளப்பியுள்ளது. (ஒ)



துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவிகளின் நண்பிகள் தேவாலயத்தில் நடந்த ஆராதனையில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதையும் இறந்தவர்களில் ஒருவரது தாயார் கதறி அழுவதையும் படங்களில் காணலாம்.

# பிரபல 'யோகாசன ராணி' 102 வயதில் காலமானார்

போனஸ்அயர்ஸ்,ஏப்.28

'யோகாசன ராணி' என்று புகழ் பெற்ற இந்திராதேவி ஆர்ஜென்ரினா தலைநகர் போனஸ் அயர்ஸில் தனது 102ஆவது வயதில் காலமானார்.

1899ஆம் ஆண்டு ரஷ்யாவின் ரிகா நகரில் பிறந்த இவர் 1927ஆம் ஆண்டு இந்தியா சென்று, அங்கு யோகாசனம் பயின்றார். தனது ரஷ்யப் பெயரை இந்திராதேவி என்று மாற்றிக்கொண்ட அவர் பின்னர் அமெரிக்கா சென்றார்.

அமெரிக்காவில் ஹொலிவூட் நடிகைகளுக்கு யோகாசனப் பயிற்சி கொடுத்ததன் மூலம் அதனை பிரபலமாக்கிய இந்திராதேவி 1947ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் யோகாசனத்துக்கு என தனிப் பாடசாலையே உருவாக்கினார்.

1985ஆம் ஆண்டுமுதல் ஆர்ஜென்ரீனாவில் குடியேறிய இந்திராதேவி தனது இறுதிக்காலம் வரை அங்கேயே தங்கியிருந்தார். (ஒ)

## சீன நாட்டுக்கான

# அமெரிக்கத் தூதரகத்தில் வடகொரியர்கள் தஞ்சம்

வடகொரியாவைச் சேர்ந்த மூவர் சீனாவில் உள்ள அமெரிக்க மற்றும் ஜேர்மனியத் தூதரகங்களில் தஞ்சமடைந்து, அந்த நாடுகளில் புகலிடம் தருமாறு கோரியுள்ளனர்.

சீனத் தலைநகரான பெய்ஜிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருவரும், ஜேர்மனியத் தூதரகத்தில் ஒருவருமாக மூவர் நேற்றுமுன்தினம் நுழைந்தனர்.

இந்த விடயத்தில் தீர்வு காண்பதற்காக சீன அரசுடன் தமது தூதரகம் இணைந்து செயற்படுவதாகவும்-

இதில் சீனா எடுக்கும் நடவடிக்கைக்குத் தாம் ஒத்துழைப்பதாகவும்-

அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்புகளை மீறி இரு வடகொரியர்களும் எவ்வாறு நுழைந்தனர் என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஜேர்மன் தூதரகத்துக்குள் நுழைந்த வடகொரியர் நேற்று தென்கொரியாவுக்குப் பயணமானதாக கூறப்படுகிறது. இந்த மூவருக்கும் தமது நாட்டில் குடியுரிமை வழங்க தென்கொரியா தயாராக உள்ளதாக தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்ததையடுத்தே அவர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# யூதக் குடியிருப்பில் பலஸ்தீனர் சூடு; ஐந்து பேர் பலி; 14பேர் காயம்!

ஹெப்ரோன்,ஏப்.28

மேற்குக்கரையில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்துபேர் கொல்லப்பட்டனர். மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

ஹெப்ரோன் நகரில் யூதக் குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட அந்தப் பலஸ்தீனர் யூதக் குடியிருப்புப் பகுதிக்குள்ளேயே ஓடித் தப்பிவிட்டார்.

அதனால், அவர் மறைந்துள்ள யூதக் குடியிருப்பில் அவரால் மேலும் உயிர்ச்சேதங்கள் விளைவிக்கப்படலாம் என்றும் -

ஆகவே அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி தீவிரப்படுத்துப்பட்டுள்ளதாகவும் -

இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் பெத்தலகேமில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் மறைந்துள்ளதாகக் கூறப்படும் 'நேட்டி விட்டி' தேவாலய வளாகத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இரு பலஸ்தீனர்கள் காயமடைந்தனர். பலஸ்தீனப் பொலீஸார் என்று நம்பப்படும் 4 பலஸ்தீனர்களே இந்தத் துப்பாகிச் சமரை ஆரம்பித்ததாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.


முன்னதாக எட்டு பலஸ்தீன இளைஞர்கள் 'நேட்டி விட்டி' தேவாலயத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டதாகவும் -

ஆயினும் அவர்கள் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்படுவதாகவும்-

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இவை ஒருபுறமிருக்க,

ரமழா நகரில் உள்ள தனது தலைமையகத்தில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தொடர்ந்து இஸ்ரேலியப் படையினரால் தடுத்து முற்றுகையிடப்பட்டிருப்பதைக் கண்டித்து ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-6)



ஜெனின் நகரில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் தகர்ந்துபோன தனது இல்லத்தைப் புனரமைக்கும் பலஸ்தீன முதியவர் ஒருவர்.



பெத்தலகேமின் 'நேட்டிவிட்டி' தேவாலயம் அருகே வீதித் தடுப்பை அமைக்கும் இஸ்ரேலியப் படையினர்.

# 'குளோனிங்' எருமையை உருவாக்க தீவிர முயற்சி

பாங்கொக்,ஏப்.28

'குளோனிங் முறை மூலம் எருமை மாட்டினை உருவாக்கும் முயற்சியில் தாய்லாந்து விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பாங்கொக் நகரில் இடம்பெற்று வரும் மேற்படி முயற்சியில் இந்த ஆண்டின் இறுதியில் 'குளோனிங்' முறை மூலமான எருமைக் கன்று பிறக்கும்.

மகிடோல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இந்தச் சோதனை முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

மாட்டுத் தொழுவம் ஒன்றில் காணப்பட்ட எருமை மாட்டின் கலங்களையும், பசுமாடுகளில் இருந்து பெறப்பட்ட கருக் கலங்களையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கருக்கள் வளர்ப்பு எருமைகளின் கர்ப்பப் பையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த எருமைகள் பிரசவிக்கும் எருமைக் கன்றுகளே உலகின் முதலாவது குளோனிங் எருமையாகும்.



ஆப்கானில் அமெரிக்கப் படையினர்

# ஆப்கானில் தீவிரவாத தாக்குதல் குறித்து ரம்ஸ்பீல்ட் எச்சரிக்கை!

[illegible]பூல்,ஏப்.28

ஆப்கானிஸ்தானில் அடுத்துவரும் மாதங்களில் பனிக்[illegible] முடிவடைவதால், தலிபான் ம[illegible] அல்கெய்டா போராளிகளின் தா[illegible]கள் அதிகரிக்கக்கூடும் என[illegible]படுகிறது.

ஆப்கானின் [illegible] அரசின தலைவர் ஹமீட் [illegible] சந்திப்பதற்காக ஆப்கானி[illegible]வுக்கு நேற்று வந்து சேர்ந்த அமெ[illegible]க்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் செய்தியாளர்களிடம் இந்த அச்சம் குறித்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய காலநிலை மாற்றமடைந்து, வெயில் காலம் ஆரம்பிக்கும் போது தலிபான்களும், அல்கெய்டாவினரும் தம்மிடையே தொடர்[illegible] [illegible] ஆப்கான் படையினர் மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் மீது அவர்கள் தாக்குதல்களை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் கூறினார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக ஆப்கானிஸ்தானுக்கு ரம்ஸ்பீல்ட் விஜயம் மேற்கொண்டுள்ளார். இந்த விஜயத்தின் போது, பாகிஸ்தானிய எல்லைப்பகுதிகளில் அமெரிக்கப் படையினர் ஒஸாமா பின்லேடன் உட்பட தீவிரவாதிகளைத் தேடும் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து ஆப்கான் இடைக்கால அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் கசீம் பாஹிம் ஆகியோருடன் ஆலோசனை நடத்துவார் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானிய மலைப் பிராந்தியத்தில் தலிபான்கள் மற்றும் அல்கெய்டாவினர் மறைந்திருப்பதாகக் கருதப்பட்ட குகைகளில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள கூட்டுப் படையினருக்கு பிரிட்டிஷ் இராணுவத்தினரே தலைமை தாங்குவதாகவும் -

ஆனால் இந்தத் தேடுதல் நடவடிக்கைகளின் போது போராளிகளால் கைவிட்டுச் செல்லப்பட்ட ஆயுதங்கள், ஆவணங்கள் மற்றும் பிற பொருள்களையே கைப்பற்ற முடிவதாகவும் -

போராளிகள் அந்த இடங்களை விட்டு விலகிச் சென்றுள்ளதாகவும் -

கூறப்படுகிறது.

அந்தப் போராளிகள் வடமேற்குப் பாகிஸ்தானில் உள்ள பழங்குடிப் பிரதேசத்தில் மறைந்திருப்பதாக நம்பப்படுவதாலேயே, அப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா ஆர்வம் காட்டி வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)

# ஐ.நா. விசாரணைக்குழு இன்று ஜெனின் வருகிறது

மேற்குக்கரை நகரான ஜெனினில் உள்ள பலஸ்தீன அகதிமுகாமின் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை குறித்து விசாரணை நடத்தும் ஐ.நா. குழு இன்று ஜெனின் நகருக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் முன்னதாகவே ஜெனின் நகருக்கு செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது இன்றுவரை பிற்போடப்பட்டதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் நேற்று அறிவித்தார். நியூயோர்க்கில் இஸ்ரேலியத் தூதுக் குழுவினர் அனானைச் சந்தித்து இது தொடர்பான தமது தரப்பு ஆட்சேபனைகளை தெரிவித்த பின்னரே அந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் ஷிமொன் பெரஸ், உண்மை நிலையைக் கண்டறியும் ஐ.நா.குழுவின் வருகை பிற்போடப்பட்[illegible] [illegible] அடுத்த கட்ட நடவடிக்[illegible] இஸ்ரேலிய அமைச்சரவை ஆலோசிக்க உதவும் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தமிழர்-ஜப்பானியர் பழக்கவழக்கங்கள்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "அனைத்துலக அரங்கில் தமிழும் ஜப்பானும்" என்ற கட்டுரையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அதன் எஞ்சிய பகுதி இன்று பிரசுரமாகிறது.

ஆண், பெண் உறவுபற்றிய உள்ளுணர்வுகளை இயற்கைத் தோற்றத்தின் பின்புலத்தில் வைத்துக் காட்டும் நயத்தக்க நாகரிகத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் மொழிக்கு உண்டு. இந்தப் பணியைத் தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும் வெகுசிறப்பாகச் செய்துள்ளன. தொல்காப்பிய இலக்கிய மரபு கூறும் முதல், கரு, உரி என்னும் மூன்று கூறுகளும் மனிதவாழ்வியலில் என்றும் எங்கும் இணைந்திருப்பவை. முதல் என்பது வாழும் நிலத்தையும் பொழுதையும் உணர்த்துவது. கரு என்பது அந்நிலத்து மரம், செடி, கொடி, வாழும் பறவை, விலங்கு பற்றிக்கூறுவது. உரி என்பது நிலத்து வாழும் மனிதரது அக, புற ஒழுக்கம் பற்றிக்கூறுவது. இந்த மூன்றும் சங்கப் பாடல்களிலே பொருந்தியிருப்பதைத் தொல்காப்பியம் வகுத்துக்காட்டியது. அதனை மன்யோகப் பாடல்களில் பொருத்திப் பார்த்த போது உலக அரங்கில் தமிழ்மொழியின் ஆற்றல் தனித்துவமாய் நின்றது.

மன்யோகப் பாடல்களைப் பாடிய புலவர்கள் மனித வாழ்வியலுக்கும் இயற்கைக்கும் இடையே இருந்த இறுக்கமான பிணைப்பை ஊன்றிக் கவனித்துள்ளனர். கூற்றுநிலையிலே பாடல்களைப் பாடியபோது உலகம் எங்கும் பொதுமையாய் விளங்கும் மனித உணர்வுகளைப் பதிவு செய்து வைத்துள்ளனர். தமிழரும் ஜப்பானியரும் பண்பாட்டுத் தளத்திலே ஒற்றுமை உடையவராய் இருந்தமையால் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையிலும் ஒற்றுமை காணப்படுகிறது. மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையிலும் ஒற்றுமை காணப்படுகிறது. மனித உணர்வுகளை இயற்கைப் பின்புலத்திலே இணைத்துக்காட்டியபோது மொழி அதற்குப் பெரிதும் துணைநின்றது. நடைமுறை வாழ்க்கையில் தோழி, தலைவன், தலைவி, நற்றாய், செவிலித்தாய், பாங்கன் எனப் பல்வேறு உறவுநிலைகளையும் இயற்கை நிலையிலே எடுத்துக்கூறும் பாங்கு சிறப்பாயுள்ளது. உணர்வுகளைப் புலப்படுத்தும் அதேவேளையில் மக்களுடைய பிரதேச நிலையான வாழ்வு நெறிமுறைகளும் நடைமுறைகளும் பண்பாட்டுக் கூறுகளாக விளக்கப்பட்டுள்ளன. காதல் பாடல்களிலே காதலன் பிரிந்து செல்லும் வழியின் இடர்கள், திரும்பிவரும் காலநிலை, காதலியின் காத்திருப்புநிலை, அவள் பிரிவுத்துயர், தாயர் கண்டிப்பு, ஊரலர், செவிலித்தாயின் அன்பு எனப் பல விடயங்கள் இரு மொழியிலும் மிகக் கூர்மையாகவும் ஆழமாகவும் பாடல்களிலே கூறப்பட்டுள்ளன.

உணர்வுநிலையை இயற்கைத் தோற்றத்தில் மறைத்து நயமாகக் கூறும் பண்பு இரு மொழிகளிலும் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. பிரிவு நிலையை இயற்கைக் காலநிலையோடு இணைத்து விளக்கும் பாங்கு சிறப்பானது. தமிழ் மொழி இலக்கியப் பாடல்களின் செய்யுள் அமைப்பும் ஜப்பானிய மொழி இலக்கியப் பாடல்களின் செய்யுள் அமைப்புடன் ஒற்றுமையுற்றிருப்பதையும் சுசுமு ஒனோ எடுத்துக் காட்டியுள்ளார். மன்யோசுப் பாடல்கள் எழுத்துருப் பெற்றபோது சீன வரிவடிவத்திலே எழுதப்பட்டபோதும் ஜப்பானிய ஒலிப்பு முறையிலே பாடப்பட்டன. அதனால் அந்த வரிவடிவம் சிறப்பாக 'மன்யோகந' என்றழைக்கப்பட்டது. பாடல்களின் அசைகளைத் துல்லியமாகப் பிரித்துக் காட்டுவதற்குச் சீன வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடல் அமைப்புகளின் மூலம் கலிவெண்பாவிலே காணப்படுவதை சுசுமு ஒனோ ஒப்பீட்டாய்வின் மூலம் நிறுவியுள்ளார்.

எனவே ஒலி, சொல்லமைப்பு, பொருள் நிலை, தொடர் அமைப்பு, இலக்கண அமைதி, செய்யுள் வடிவம், பொருள் மரபு என மொழியின் இயல்புகளிலும் பண்புகளிலும் காணப்படும் ஒன்றுமைகள் கொண்டு தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும் ஒற்றுமையுடையன என முடிவு செய்வது எளிதாயிற்று. திராவிட மொழிக்குடும்பத்தில் ஜப்பானிய மொழியை இணைப்பதே பொருத்தமானதாகும். தமிழ் மொழியின் வளர்ச்சி நிலையும் ஆற்றலும் அதனோடு சேர்ந்திருந்த மொழிகளைப் பிரித்துக் காட்டும் தன்மையுடையன. தமிழர்-ஜப்பானியர் பண்பாட்டு ஒற்றுமைநிலையை நுணுகி ஆய்வு செய்தபோது பிறப்பு, இறப்பு, வழிபாடு, திருமணம் போன்ற வாழ்வியல் நடைமுறைகளிலும் ஒற்றுமையான பண்புகள் இருப்பதை அறியமுடிந்தது. இலக்கியத்தரவுகள் மட்டுமன்றி இறப்பு நடைமுறை தொடர்பான ஆய்வுகள் அகழ்வாய்வு நிலையில் மேற்கொள்ளப்பட்டபோது சிறப்பான சன்றுகள் கிடைத்துள்ளன. இறந்தோரை வைத்துப் புதைத்த மட்தாழிகள் அண்மைக் காலத்தில் ஜப்பானில் கியூசுப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் தமிழ் நாட்டில் கிடைத்த மட்தாழிகள் பெரிதும் ஒத்துள்ளன. குறிப்பாக தாழிகளின் மேற்பகுதியில் வரையப்பட்டிருக்கும் குறியீட்டு வரிவடிவங்கள் பெரிதும் ஒற்றுமையுடையனவாய் இருப்பதால் பொருள் நிலையிலும் ஒற்றுமையுடையனவாயிருக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்து.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இன்று உலக அரங்கிலே தமிழ் மொழி தனித்துவமுடைய ஒரு மொழியாக நிற்கிறது. அதன் தொன்மையும் இலக்கியச் செழுமையும், கலைப் படைப்புகளும், பொருள் மரபும் அச்சிறப்பை வலியுறுத்தி நிற்கின்றன. இவற்றிற்கு மேலாக இன்று தமிழ் மொழி ஜப்பானிய மொழியையும் உலக அரங்கிலே கொணர்ந்து நிறுத்தியுள்ளது. கைத்தொழில் நுட்ப நாடாக ஜப்பான் இன்று விளங்குகிறது. ஆனால் ஜப்பானிய நாட்டின் பழைய பண்பாட்டுச் சிறப்பையும் மொழி, இலக்கிய வளத்தையும் அறிமுகம் செய்யும் மொழியாக தமிழ் திகழ்கிறது. ஒப்பீட்டாய்வு நிலையில் தமிழ்மொழி ஒரு காலகட்டத்தில் ஜப்பானிய மொழி மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை அறியமுடிகிறது. ஜப்பானிய பண்பாட்டின் கூறுகளை சீனாவிலும் கொரியாவிலும் காணும் மரபுக்கு மாறாக பழந்தமிழ் நாட்டிலே காணுகின்ற பதிய மரபு ஒன்று தோன்றியுள்ளது.

இந்தப் பண்பாட்டுக் கூறுகள் எப்போது இருநாட்டவரிடையேயும் ஊடாட்டம் கொண்டிருந்தன என்ற வினாவும் உலக அரங்கிலே இன்று எழுந்துள்ளது. ஆனால் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான மொழி ஒற்றுமையும் ஆவணமும் உறுதிசெய்யப்பட்டுள்ளன. அது இரு மொழிகளையும் உலக அரங்கிலே நிறுத்தியுள்ளது. இருமொழி வரலாற்றிலும் அவை எதிர்காலத்தில் பேசப்படும் பொருளாகிவிட்டன. இந்தப் பொருள்பற்றிய ஆய்வை ஏனைய துறைவல்லுநரும் செய்து முடிவுகளை வெளியிட வேண்டிய கட்டுப்பாடுடையவராகிவிட்டனர். உலக ஆய்வரங்கில் தமிழ் தலை நிமிர்ந்து நிற்கிறது. அதனுடன் தோளோடு தோளாக இணைந்து ஜப்பானிய மொழி நடந்து செல்லவுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் தகவல் தொழிலநுட்ப யுகத்திற்கு மனித மேம்பாடு தொடர்பான தகவல்களைச் சிறப்பாகத் தொகுத்துக் தருவதற்கு இரு மொழிகளும் அனைத்து உலக அரங்கில் அழகாய் வீற்றிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ☆

## பஸ் சேவையை நீடிக்க கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.28

தினமும் காலையில் சங்கானையிலிருந்து சுன்னாகம், மருதனார் மடம் ஊடாக கைதடி வடக்கு வரை நடத்தப்படும் பஸ் சேவையை சாவகச்சேரி வரை நீடிக்குமாறு இப்பகுதி அரச ஊழியர்களும், பொதுமக்களும் வ.பி.போ.சபை பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதியில் அரச அலுவலகங்களும், பாடசாலைகளும் மீள இயங்கும் நிலையில் வலிகாமம் பகுதியிலிருந்து வரும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் காலை 7 மணிக்குச் சங்கானையிலிருந்து புறப்படும் 811 வழித்தட பஸ்சேவை கைதடி வடக்கு வரை நடத்தப்படுவதாகவும்

தமது நலன் கருதி இந்த பஸ் சேவையை சாவகச்சேரிவரை நீடிக்குமாறும் - கோரியுள்ளனர். (ஒ-117)

---

# கண்ணீர் அஞ்சலி

யா/மணற்காடு றோ. க. த. க. பாடசாலையின்

*ஆசிரியர் திரு. செ. சுவேந்திரன்* அவர்களின் அன்புக் தந்தையார்

## கணபதிப்பிள்ளை செல்லையா

(குரும்பைகட்டி, புலோலி)

அவர்கள் 29-03-2002 இல் காலமானதையிட்டு நாம் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை,
குடத்தனை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

(3249)

---

# முதலாம் வருட நினைவலைகள்

மலர்வு 23 - 10 - 1936



உதிர்வு 09 - 05 - 2001

## அமரர் பாலன் கிருஷ்ணபிள்ளை

(கோண்டாவில்)

திதி: 28.04.2002

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் பெட்டகமாய்
பண்பின் உறைவிடமாய் பாரில் வாழ்ந்திருந்தீர்
இன்று உங்களை நினைவு கூருகின்றோம்
மறக்க முடியவில்லையே உமது திருமுகத்தை!

*நாவலடி, உடுப்பிட்டி.* (3253) - குடும்பத்தினர்.

---

# அகவை அறுபதில்

## திரு.சண்முகம் ஜெயதாசன்



மணிவிழாக் காணும் மாண்புமிகு மாமாவே!
அவனியில் நீங்கள் அகவை பல வாழ
அன்புடன் வாழ்த்துகின்றோம்.
நல்வழி காட்டி எம்மை நலமுடனே வாழ வைக்கும்
நீவிர் – நன்மனையாளுடன்
பல்லாண்டு வாழவே
பணிவுடன் வாழ்த்துகின்றோம்!

| | |
|---|---|
| சின்னண்ணா | - உடுப்பிட்டி, |
| அச்சா | - உடுப்பிட்டி, |
| ராஜன் | - யாழ்ப்பாணம், |
| குட்டி | - யாழ்ப்பாணம். |

(3250)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

Happy 28.04.2002 Birthday



## செல்வி கிருஷிகா சுரேஷ்குமார்

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் வசிக்கும்

திரு.திருமதி சுரேஷ்குமார் - தர்சினி தம்பதிகளின்

செல்வப் புதல்வி செல்வி கிருஷிகா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

கிருஷிகாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், அத்தைமார் (ஹொலண்ட்) மாமா, மாமி, கொழும்பில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், பிரான்ஸ், ஜேர்மன் சுவிஸில் வசிக்கும் அப்பப்பாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், அத்தைமார், இலங்கையில் வசிக்கும் பூட்டன், பூட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அருள்மிகு நல்லைக்கந்தன் கிருபையால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நலமாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

*சுதுமலை.* (3243) *திருமதி சு.கந்தசாமி* (அம்மம்மா)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 26 - 10 - 1955



இறப்பு 29 - 03 - 2002

## அமரர் சரவணமுத்து குணரத்தினம் (குணம்)

**அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழ்ந்தீரே!**

***ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.***

இன்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*29/2, கடைச்சாமி ஒழுங்கை,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

(3252)

*பிரிவால் துயருறும்:*
*குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# ஜெயலலிதாவின் அரசியல் பித்தலாட்டம்!

"இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜூன் மாதம் இந்தியாவுக்கு வரும்போது அவரைச் சந்திப்பேன். விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் நேரடியாக விடுப்பேன்" - இப்படி திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட' கதைதான் இது. ஜெயலலிதா ஆசைப்பட்டுவிட்டு போகட்டும். அது அவரது ஆசை. அவ்வளவுதான்.

தலைவர் பிரபாகரனை ஜெயலலிதா விரும்பும் தரப்பிடம் ஒப்படைக்கும் சக்தி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருக்கவேண்டுமே - அவரது மனக் கோட்டை நிறைவேறுவதற்கு.

'கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போன' விடயமாக ஜெயலலிதா அம்மையாரின் திட்டம் - எதிர்பார்ப்பு - அமைந்துள்ளது. நடக்காத - நடக்கமுடியாத - விடயத்தை அவர் தமது அரசியல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை; அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

ஆனால், அதற்குமேல் அவர் கூறியுள்ள இரண்டு விடயங்கள்தான் ஈழத்தமிழர்களை உறுத்துவதாக உள்ளன.

ஒன்று - 'விடுதலைப் புலிகள் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லர். அவர்களைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது. தீர்வுக்கான பேச்சுக்களை அவர்களுடன் மட்டும்தான் நடத்தவேண்டும் என்ற வாதத்தையும் ஏற்கமுடியாது. ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்த வேண்டியது அவசியம்.' - இப்படி ஜெயலலிதா தெரிவித்திருப்பது.

இரண்டாவது - 'விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. எனவே தடைசெய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவாகப் பேசி வரும் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' - என்று ஜெயலலிதா அறிவித்திருப்பது.

ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலில் முக்கிய கோரிக்கையாக முன்வைத்து, பெரு வெற்றிமூலம் ஈழத்தமிழர்களின் அங்கீகாரத்தை அதற்குப் பெற்றுக்கொடுத்து உறுதிப்படுத்தியிருக்கின்றது. சர்வதேச சமூகமுமே அதை இன்று ஏற்றுக்கொண்டு விட்டது. இலங்கையில் வாழக்கூடிய மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தமிழ் இனத்தவர்களும் தங்களது தலைவர்கள் மூலம் இந்த நிலையை ஏற்று அங்கீகரித்துவிட்டனர்.

இந்த ஒட்டுமொத்தமான அங்கீகாரத்திற்கெதிராக சிறிய குழுக்களான டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி.யும், வரதர் அணியும் மட்டுமே 'புறணி' பாடிக்கொண்டிருக்கின்றன.

எனவே ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள் அல்லர் என்று ஜெயலலிதா கூறுவது வெறும விதண்டாவாதமே.

அத்தோடு தனது அரசியல் லாபங்களுக்காக ஈழத்தமிழர்களின் விடுதலை உணர்வையே விலை பேசி விற்க முன்வந்திருக்கும் ஜெயலலிதா போன்ற தமிழகத் தலைவர்கள் விடுதலைக்காக ஏங்கி வீரப்போர் நடத்தும் ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகள் யார் என்பது குறித்து முடிவெடுத்துக் கருத்துக் கூறவோ அதுபற்றிப் பேசவோ தகுதியற்றவர்கள் என்பதையும் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றோம்.

பல்லாயிரக்கணக்கான உயிர்களை - பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான உடைமைகளை - இழந்து, ஈழத் தமிழர்கள் விடுதலை வேட்கையுடன் நடத்தும் வீரம் செறிந்த தியாகப் போர் குறித்தும் அதன் தாற்பரியம் குறித்தும் புரிந்துகொள்ளும் தகுதி, அப்பாவி மக்களை ஏமாற்றி பித்தலாட்ட அரசியல் நடத்தும் வேடதாரிகளான ஜெயலலிதா போன்றோருக்கு கிஞ்சித்தும் கிடையாது என்பது தெளிவு.

இதனால், ஈழத்தமிழினம் நடத்தும் விடுதலைப் போரின் நியாயத்தை - அடிப்படையை - உணர்ந்துள்ள தமிழகப் பிரமுகர்களின் கருத்து, ஜெயலலதா போன்றோருக்கு வேம்பாகக் கசக்கின்றது. அதனாலேயே சட்டத்தைக் காட்டி அவர்கள் வாயை அடக்கவும், சட்டத்தின் பெயரால் அவர்களின் குரல் வளையை நசுக்கவும் திட்டமிட்டிருக்கின்றார் அம்மணி.

ஈழத்தமிழர்களின் ஏகத் தலைவனான பிரபாகரன் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவனாக உயர்வது கண்டு மனம் பொருமுவதால் ஜெயலலிதா பிதற்றுகின்றார் என்று கருதுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

# சமாதான முயற்சிகளுக்கு துணைபோக வேண்டாம்

## தாய்லாந்திடம் கோர 3 கட்சிகள் முடிவு

கொழும்பு,ஏப்.28

மே மாத நடுப்பகுதியில் சிஹல உறுமய, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மகாஜன எக்சத் பெரமுனை ஆகிய மூன்று கட்சிகளும் சேர்ந்து நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக கூட்டுப் போராட்ட நடவடிக்கை ஒன்றில் ஈடுபடத் தீர்மானித்திருக்கின்றன.

- இவ்வமைப்பினால் மே மாதம் 14ம் திகதி அநுராதபுரத்தில் விடுதலைப் புலிகள் மகாபோதியைத் தாக்கியதை நினைவுகூர்ந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலத்தின் பின்னர் "மகாபோதி" வளவில் மகா சங்கத்தினரின் ஆசி வேண்டி, "சத்தியக் கிரியை" நிகழ்வும் நடைபெறும்.

மே மாதத்தில் நடைபெறவுள்ள அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களை இரத்துச் செய்யும்படி கேட்டுக்கொள்ளும் வேண்டுகோள் ஒன்றை 3 கட்சிகளும் கூட்டாக தாய்லாந்து அரசுக்கு அனுப்புவதென்றும் முடிவுசெய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புத்த சமயத்தினரின் புனித தலங்களான மகாபோதி மற்றும் தலதா மாளிகை ஆகியவற்றை விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும் -

பௌத்த பிக்குகளை அவர்கள் அழித்திருப்பதாகவும் -

எனவே இன்னுமொரு பௌத்த நாடாகிய தாய்லாந்திற்கு இந்தக் கோரிக்கை விடுவதில் தவறேதும் இருப்பதாகத் தாம் கருதவில்லை என்றும் -

சிஹல உறுமயவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

- இந்த அமைப்பு இந்திய அரசுடன் பேச்சுக்களை மேற்கொண்டு, சமாதான நடவடிக்கை என்று கூறப்படுகின்ற செயற்பாட்டிலிருந்து விலகியிருக்கும்படி வலியுறுத்தவிருக்கிறது என்றும் அறியமுடிகிறது. (ஒ)

## விடுமுறை முன்அனுமதி பெறாது

# பட்டப்படிப்பு மேற்கொள்ளும் ஆசிரியர்கள் பணி நீக்கப்படுவர்

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டு பட்டப்படிப்புக்கான விடுமுறை முன்அனுமதி பெறாது பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகக் கல்வி பயில்வோரை உடனடியாக ஆசிரியர் சேவையில் இருந்து இடைநிறுத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் ஏ.அன்றூ த சில்வாவினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய பட்டப்படிப்புக்கான விடுமுறை முன்அனுமதி பெறாது உள்வாரி மாணவராக பல்கலைக் கழகங்களில் பயின்றுகொண்டிருக்கும் ஆசிரியர்கள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல் பதவியிலிருந்து நீக்கிக்கொண்டதாகவே கருதப்படுவார்கள் என்றும் -

இந்த அறிவித்தலுக்கு இணங்க பாடசாலை அதிபர்கள் ஊடாக சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுத்து அவர்களது பதவி நிறுத்தற் கடிதங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கப் பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் முறையாகக் கல்வி விடுமுறையைப் பெற்றுக்கொள்ளாது பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகக் கல்வி கற்பது தொடர்பாக கல்வி அமைச்சுக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-8)

# தமிழ்க்கட்சிகள் சாதிக்க முடியாததை விடுதலைப் புலிகள் சாதித்துள்ளனர்

## கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28

"நாம் இப்பொழுது ஒருமிதவாதக் கட்சியினர் அல்ல. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று திரும்பத் திரும்பக் கூறியுள்ளோம்."

- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம்.சிவசிதம்பரம் பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள பேச்சே நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் என மேலும் அவர் கூறியுள்ளார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவற்றுக்கான பதில்களும் வருமாறு:-

**கேள்வி:-** முற்றிலும் போராட்ட முனைப்பிலேயுள்ள விடுதலைப் புலிகளுக்கும், தங்களுக்கும் இடையே எப்படி இணக்கப்பாடு ஏற்படும்?

***சிவசிதம்பரம்:*** கடந்த 20 வருட காலமாக தமிழ்க் கட்சியினரால் சாதிக்க முடியாததொன்றை புலிகள் சாதித்திருக்கிறார்கள். பேச்சு மேசையில் நல்ல முடிவொன்றை எட்டுவார்கள் என நான் நம்புகிறேன். விடுதலைப் புலிகளே இன்றைய பிரச்சினைக்கு நல்ல முடிவை ஏற்படுத்தக் கூடியவர்கள். அத்துடன் அவர்களையே நாம் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு விட்டோம். ஒருவரை ஒருவர் நாம் நம்புகிறோம்.

**கேள்வி:** மீண்டும் ஒரு போராட்டச் சூழ்நிலையை புலிகள் ஏற்படுத்தினால் என்ன செய்வீர்கள்?

**பதில்:** அவர்களை நாம் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்ற பின்னர் அவர்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் நாம் எதிரானவர்கள் அல்லர்.

**கேள்வி:** இடைக்கால நிர்வாகத்தில் நீங்கள் பங்கேற்பீர்களா?

**பதில்:** நாம் ஒருபோதும் அதில் பங்கு கேட்கமாட்டோம். நாடாளுமன்றத்தில் நாம் இருப்பதனால் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் பற்றி வலியுறுத்துவதே உடனடித் தேவையாகும்.

**கேள்வி:** பிரதமரின் சமாதான நடவடிக்கை பற்றி?

**பதில்:** அவர் மிகவும் நேர்மையானவர் என்று நம்புகிறேன்.

## தொண்டர் மற்றும் பகுதிநேர

# ஆசிரியர்கள் நாளைமுதல் மீண்டும் மறியற்போர்!

யாழ்ப்பாணம்,ஏப்.28

தமது நிரந்தர நியமனத்துக்கான அனுமதியைக் கல்விச் சேவை ஆணைக்குழு உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரி யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் யாழ்ப்பாணம் கல்வி வலயம் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணப் பணிமனை ஆகியவற்றின் முன்பாக நாளை திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஆகவே தொண்டர் மற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் நாளை காலை 7 மணிக்கு யாழ்.கல்வி வலயம் முன்பாக ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பணி நிரந்தரம் உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 18ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை முன்பாக ஒரு நாள் அடையாள மறியற்போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டமை தெரிந்ததே. (ஒ-10-13-180)

### நாளை

சித்திரை 16
திங்கட்கிழமை
(29.04.2002)
திதி : திருதியை
பின்னிரவு 4.28 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
முன்னிரவு 7.47 வரை
[illegible] : 11.58 - 1.28
[illegible] : 7.28 - 8.58
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

துயரம் என்ற பறவை நம் தலைக்கு மேலாகப் பறந்தால அதை நாம் விலக்க முடியாது தான். ஆனால் அதனை நம் தலை மீது கூடுகட்ட அனுமதிக்க வேண்டியதில்லை.

# நாவாந்துறையில் சுகாதாரசேவை திருப்திகரமாக நடக்கவில்லை

## அப்பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாநகர சபையின் நடமாடும் சுகாதார சேவையினரால் கடந்த 19 ஆம் திகதி நாவாந்துறை 19ஆம் வட்டாரத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சுகாதாரசேவை திருப்திகரமான முறையில் நடைபெறவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சேவையில் முழு ஆளணியினரும் ஈடுபடுத்தப்படவில்லை எனவும், நாள் முழுவதும் நடைபெறும் இச்சேவை அன்று அவ்வாறு நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாதாந்தம் இருதடவைகள் வட்டாரங்கள் தோறும் நடைபெறும் இந்த நடமாடும் சுகாதார சேவையில் பாடசாலை செல்லாத சிறுவர்கள், நோய் வாய்ப்பட்டுள்ளோர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் ஆகிய விவரங்கள் பெறப்படுவதுடன் கலாசார, சுகாதாரச் சீரழிவுகள் பற்றியும் விசாரிக்கப்பட்டு அறிவுறுத்தல்களும், நிவாரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் 19ஆம் திகதி நடைபெற்ற இச்சேவையில் மேற்குறிப்பிட்டபடி முழுமையான சேவை வழங்கப்படவில்லை எனவும் -

இது குறித்து மாநகரசபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் - பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண மண்டபமும் தங்குமிட வசதிகளும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைபுரியும்
சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No:89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo - 13
T.P.No. 01 - 433182, 472582

M.திலகவதி, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1243)


## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 12 - 02 - 1937 | மறைவு 02 - 05 - 1999

அமரர்
**செல்லத்துரை பாலசிங்கம் (சிங்கர்)**

*(பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ், கொழும்பு)*

திதி:28.04.2002 ஞாயிற்றுக்கிழமை

உள்ளமெனும் கோயிலிலே ஒளி விளக்கை
ஏற்றி வைத்து அதைக் காற்று வந்து
அணைக்காமல் அன்புதனைக் காவல் வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே.....!
எங்கள் நெஞ்சமும் உங்கள் நெஞ்சமே!

*இராசவீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(3208)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 30 - 10 - 1942 | ஆண்டவன் அடியில் 26 - 03 - 2002

அமரர்
**Dr.கதிர்காமு கந்தசாமி D.A.M. (Cey)**

ஊருக்கு உத்தமனாய்
வீட்டுக்கு விடிவிளக்காய்
வைத்திய சேவைக்கொரு வழிகாட்டியாய்
வாழ்ந்து காட்டினீர்கள்!

பட்டென்று படுத்துறங்கி பாதிவழியில் எம்மை நீங்கள் விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.

*15/13, "சிவகாசி",*
*மாரி அம்மன் வீதி,*
*திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர். (3217)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 11 - 1925 | உதிர்வு 08 - 05 - 2001

**அமரர் சின்னப்பொடி சின்னவன்**

அன்பின் திருவுருவே! பண்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே!
சார்ந்தோரை வாழவைத்த தெய்வம் எம்மை ஏங்க
விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஆனது.

*"ஆர்த்திக் மகால்",*
*நூலக வீதி,*
*கைதடி தெற்கு.*

(3109)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி | 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 01 - 1910 | இறையடி 29 - 03 - 2002

திருமதி
**யோசப் அன்னம்மா**



மலர்வு 22 - 08 - 1905 | இறையடி 28 - 04 - 1991

அமரர்
**சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை யோசப்**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை மறக்கமுடியவில்லையே! இன்று தங்களை நினைவுகூர்ந்து ஆத்மா இரட்சிக்கப்படப் பிரார்த்திக்கின்றோம்.


*72A,றக்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(3216)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நினைவலைகள்

சபிண்டீகரணமும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



**திருமதி பரமேஸ்வரி தர்மலிங்கம்**

21ஆம் ஆண்டு



**அமரர் இளையதம்பி தர்மலிங்கம்**

08.07.1924 ← தோற்றம் → 13.08.1913
27.03.2002 ← மறைவு → 28.04.1981

"தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்கதோர் மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை"

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.*

(3182)

ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்.


## கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

## CAVADI மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதிமயம்
**காவடி மார்க் கற்பூரம்**

கற்பூரம் என்று
கேட்காதீர்கள்
'காவடி' என்று
கேட்டு வாங்குங்கள்

நாடெங்கிலும்
கிடைக்கும்




ஏக விநியோகத்தர்கள்:

## பிரபா டிரேடிங் கம்பனி

31, கபோஸ் லேன், கொழும்பு-11. தொ.பே: 329426, 422750 (C/21497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3100)

தரமான புறொயிலர் கோழிகள் உயிருடன் விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம் செய்து தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (கலட்டிச்சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (3210)

இறைச்சிக்கோழிகள் (Broilers) விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 85,செம்மணிவீதி (கல்விக்கந்தோருக்கு அருகில்), நல்லூர். (3219)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. வேண்டிய அளவுகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய். (3222)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.PNo. 3529, 2867 (3242)

## விற்பனைக்கு

சிறிய பலசரக்குக் கடைக்குப் பாவித்த தளபாடங்கள், கட்டில், மேசை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: பே.கணேசலிங்கம், 233/5, கோவில் வீதி, நல்லூர். (3042)

புலோலி மெதடிஸ்ற் மிசன் பாடசாலைக்கு மேற்குப் புறமாக உள்ள வீடும் தோட்ட நிலமும் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: சு.செல்வராஜன் கொடிகாமம் வீதி, புலோலி. (3225)

நல்லின டோமன் பின்சர் (Dobe-rman Pinscher) 11/2 மாத ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3248)

## உடன் விற்பனைக்கு

கறுப்பு இன பொமேரியன் நாய், நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி (லக்கி பாம் ஒழுங்கை) பார்வையிடும் நேரம்: 7.00 - 9.00 a.m., 2.00 - 5.00 p.m (3231)

## தவறிவிட்டது

66,இராஜசிங்கம்வீதி, கொழும்பு 6 வெள்ளவத்தையைச் சேர்ந்த செல்லதுரை தேவகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 840430413V),முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.கேதீஸ்வரன், 65,இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், கன்னாதிட்டி என்ற விலாசத்தில அல்லது K.விஜயலட்சுமி, 'இரத்தின வாசா', மல்வம், உடுவில் என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.(3237)

25-04-02 அன்று பெறுமதியான கைச்செயின் ஒன்று நல்லூர் செட்டித் தெருவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில் பிரதமகுருவிடம் ஒப்படைத்து உதவவும். (3230)

கொழும்பில் இருந்து யாழ்.வந்த WP - GH - 1558 என்ற இலக்கமுடைய வானில் பயணிகள் பொதி ஒன்று கடந்த 25-04-2002 வியாழக்கிழமை பிற்பகல் 1.15 மணியளவில் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திரு.V.N. சபாரட்ணம், 64/10A, ஸ்ரேஷன் லேன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (3241)

இல.1007, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரத்தினம் பிரசாத் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0901013271), பாடசாலை அடையாள அட்டை என்பன 08.04.2002 அன்று மருதடி விநாயகர் ஆலயச் சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (3247)

## வீடு வாடகைக்கு

கிழக்கு கோண்டாவிலில் 2 அறையுடன்கூடிய அனெக்ஸ் வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம் 1503, மே/பா உதயன். (3238)

## தேவை

மருத்துவபீட மாணவர்களுக்கு 2 அல்லது 3 அறைகள் கொண்ட வீடு அல்லது 2 அறைகள் யாழ் வைத்தியசாலைச் சுற்றாடலில் வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1504, மே/பா உதயன்.(3240)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் 2ஆம் பாதம், உதயத்தில் செவ்வாய்க்குற்றமுள்ள, லண்டனில் சொந்தமாக சுப்பமார்க்கட் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த, அழகிய, நற்பண்புள்ள மணமகளை சீதனத்துடன் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: வ.தனபாலசிங்கம், 22, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி. (3130)

## திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா? எத்தகைய மணமக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு.எம். பொன்னுத்துரை, ஹரேகிருஷ்ணா திருமண சேவை, பெரியமதவடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (3056)

## வகுப்புகள்

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களால் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. G.C.E. (O/L) Dec. 2002, A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கு, 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில்) (3237)

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள், புதிய வகுப்புகள் ஆரம்பம: 30-04-2002. தொடர்பு: 5, அம்மன் வீதி, வைரவர் கோயில் முன்பாக கந்தர் மடம், யாழ்ப்பாணம். (3234)

## பேரியல் அஷ்ரப்புக்கு அதாவுல்லா கண்டனம்

சமாதானத்துக்கு எதிராகக் கொழும்பில் நடைபெற்ற பேரணிகளில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் கலந்து கொண்டதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஏ.எம்.ஏ.எல். அதாவுல்லா கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ஜே.வி.பி., பொ.ஐ.முன்னணி ஆகிய பேரினவாதக் கட்சிகள் சமாதானத்துக்கு எதிராக நடத்திவரும் பேரணிகளில் கலந்துகொண்ட பேரியல் அஷ்ரப், சமாதான முயற்சிகளுக்கு எதிரான கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார். இதற்குத் தனது கண்டனத்தை வெளியிட்ட அதாவுல்லா, பேரியல் அஷ்ரப்பின் அந்தக் கருத்துக்கள் மிகவும் கண்டிக்கப்படவேண்டியவை என்று மேலும் சொன்னார். (ஒ-4)

## போதைப் பொருள் கடத்திய இலங்கையர் சென்னையில் கைது!

புதுடில்லி,ஏப்.28

சென்னையில் 50 கிலோ நிறையுடைய 'ஹெறோயின்' போதைப் பொருள்களைத் தென்னிந்தியப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கையர் ஒருவர் உட்பட ஐவர் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த போதைப் பொருள் இலங்கைக்கு எடுத்துவரத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் - பிடிபடுவதற்கு முன்னர் சுமார் 20 கிலோ 'ஹெறோயினை' அவர் வீசிவிட்டதாகவும் -

அதனால் மிகுதியாக இருந்த 50 கிலோ ஹெறோயின் மட்டுமே கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-4)

## பொதுக்கூட்டம்

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பவள விழாச் சபையின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விரிவுரையாளாகள், மாணவர்கள், டி.ஏ.எம்.சங்க உறுப்பினர்கள் மற்றும் பவளவிழாச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கைதிகளை விடுவிக்க தென்பகுதி சட்டத்தரணிகள் முயற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.28

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மற்றும் புலிகளுடன் தொடர்புகொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக தென்பகுதிச் சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் வருகைதந்துள்ள 40 சட்டத்தரணிகளில் ஒருவரான லக்ஸ்மன் ரத்நாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக தென்பகுதி சட்டதரணிகளில் ஐந்துபேர் கொண்ட குழுவினர், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் மற்றும் புலிச் சந்தேக நபர்களின் விவரங்களைச் சேகரித்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-9)

## நெஞ்சினின்றகலா ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 25 - 09 - 1953



ஆண்டவன் மடியில் 09 - 04 - 2001

### அமரர் கந்தன் செல்வராசா (செல்வம்)

(கைதடி தெற்கு, சனசமூக நிலைய முன்னாள் பொருளாளரும், செல்வா வீடியோ உரிமையாளரும்)

*திதி:- 28.04.2002*

அன்பால் அணைத்திடும் ராசா  
அறிவால் எங்களை வளர்த்தீர்!  
நன்றாய்க் கடமைகள் முடித்து  
நலமாய் வாழ்ந்திட நினைத்தீர்!  
இடப்பெயர்வாலே உமக்கும்  
இடர் பல தந்தது எமக்கும்!  
இளவயதினிலே இறையருள் சேர்ந்தீர்!  
ஓராண்டாகிலும் உங்கள் நினைவு  
ஒன்றாய் எம்முள் நிலைக்கிறது!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்  
மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.  
மகன்:- சந்திரமோகன்  
மைத்துனர்மார்:- குணசிங்கம் } டென்மார்க்  
மகாலிங்கம் குடும்பம்

*"அகிலா இல்லம்" கைதடி தெற்கு, கைதடி.* (3228)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டுகின்றோம்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் எட்டு (8) அதிவிசேட திறமைச் சித்திகளைப் பெற்று யா/இராமநாதன் கல்லூரிக்குப் பெருமையை ஈட்டித்தந்த

### செல்வி சாளினி ஜஸ்மின்

அவர்களையும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஏனைய மாணவகளையும், வலய மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள 15 வயதுக்குட்பட்ட வலைப் பந்தாட்டக் குழுவினரையும் பாராட்டுவதுடன் இவர்கள் மேலும் சிறந்து விளங்கி கல்லூரிக்குப் புகழை ஈட்டித்தரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். (3239) பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா இராசையா

*(இராசப்பு வாத்தியார்)*

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 24-09-1921 உதிர்வு 09-06-2001

திதி: 28 - 04 - 2002

எம் குடும்ப ஒளி விளக்கே!  
அன்பின் பிறப்பிடமே!  
வருடம் ஒன்று போனாலும்  
ஆற்ற முடியாது எம் சோகம்  
மறக்க முடியாது உங்கள் நினைவுகள்.

*ஈவினை, புன்னாலைக்கட்டுவன்* (3227) - குடும்பத்தினா

## 21ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 12 - 04 - 1922



மறைவு 09 - 04 - 2002

### திருமதி துரைச்சாமி மனோன்மணி

நேசமுடன் பழகிப் பாசமுடன் வாழ்ந்த  
உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்!

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு உதவிய அன்புள்ளங்கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (28.04.2002) ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு வில்லூன்ற தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை 29-04-2002 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"கரன் குன்றம்" மாதனை, பருத்தித்துறை.*

சறோஜினிதேவி மகாலிங்கம் *(மகள்)*,  
நாகலிங்கம் பாஸ்கரன் *(மகன் - கொழும்பு)* (3229)

## மரண அறிவித்தல

### திருமதி கார்த்திகேசு சோதீஸ்மதி

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு சோதீஸ்மதி 26.04.2002இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - அமிர்தவல்லி தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் கணநாதன், கணஈசன், கலைமதி, கணராசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகமலர் கிரிசாந்தி ஆகியோரின் மாமியாரும், ஏரம்பமூர்த்தி, யோகீஸ்வரன், குமாரதேவன் மற்றும் காலஞ்சென்றவர்களான மங்களம், ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:-*  
*ந.ஏரம்பமூர்த்தி*  
*ந.யோகீஸ்வரன்*  
*ந.குமாரதேவன்*  
*(சகோதரர்கள்)*

*தற்காலிக முகவரி:- கைதடி மேற்கு, கைதடி.*

*நிரந்தர முகவரி:- தனங்கிளப்பு, சாவகச்சேரி.* (3236)

# நிவாரண அரிசி விலையேற்றத்தை உடன் நிறுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.28

நிவாரணமாக வழங்கப்படும் அரிசியின் விலை அதிகரிப்பை உடன் நிறுத்திவைக்க ஆவன செய்யுமாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு யாழ்.மாநகர சபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண அரிசியின் விலை உயர்வால் யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் குறிப்பாக யாழ். மாநகரசபை கோட்டை வட்டாரத்தில் வாழ்ந்த மக்கள் படும் துன்ப துயரங்கள் சொல்லில் அடங்கா.

இம்மக்களை மீளக்குடியமர்த்த தாங்கள் உடன் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்பிக்கையுடனும் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண அரிசியின் விலையுயர்வை உடன் நிறுத்திவைக்க ஆவன செய்வதுடன் நிவாரணத்திற்கு வழங்கப்படும் எந்த வகையான உணவுப் பொருள்களின் விலையேற்றத்தையும் அனுமதிக்காமல் யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் யாழ்.மாநகருக்கு நீங்கள் பலதடவை வருகை தந்தும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடத் தவறிவிட்டீர்கள். அம்மக்களின் துயர வாழ்வைக் காணத் தவறிவிட்டீர்கள். முஸ்லிம் மக்கள் வாழ்ந்த வீடுகளில் தற்காலிகமாக வசித்துவந்த மக்கள் முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதால் அவர்களுக்கு வசிப்பிடம் வேண்டியது நியாயமான கடமையே. அதே சமயம் அப்பகுதிகளில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு மாற்றிடம் வழங்கவேண்டியமை தங்களது கடமையென்பதும் குறிப்பிடத்தக்கதே.

- இவ்வாறு அதில் உள்ளது.(ஓ)

## முறைசாரா கற்கைநெறி பயிற்சி

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் முறைசாராக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளன.

பளை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவிருந்த தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி கரவெட்டி, வதிரி தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் கழகத்திலும்,

பெண்களுக்கான உடையமைத்தல் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் மூன்றாம் திகதி கைதடி முத்துக்குமாரசுவாமி மாவித்தியாலயத்திலும் ஆரம்பமாகுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-117)


## மணிவிழா வாழ்த்து



சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான ஸ்தானீகர் கலாநிதி

**நா.சோமாஸ்கந்தக்குருக்கள்**

அவர்களின் மணிவிழா இன்று ஜேர்மனியில் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

திரு.மு.செல்வஸ்தான் தம்பதிகள் (அதிபர்)
சிவன் மஹோற்சவ 14ஆம் நாள் உபயகாரர்.

சிவன் கோயில் அருகாக,
சுன்னாகம்.

(சி-21836)

## மணிவிழா வாழ்த்து



**உயர்திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை**

தம்பதிகளை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சண்.வாமதேவன் - அதிபர், யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்.
ஞான.திருக்கேதீஸ்வரன் - ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி

(3254)

## தேவை

சகல பேக்கரி தயாரிப்புக்களும் தயாரிக்கக் கூடிய "பாஸ்" தரத்தில் உள்ளவர்களும், கடைக்கு விற்பனையாளர்களும தேவை.
உடனே நேரில் வரவும்
தொடர்பு:-
**றொலெக்ஸ் பேக்மாட்,**
**118, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(3256)

உ
அம்பிகை துணை

## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீபகவத் கிருபையாலும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருளாலும் காஞ்சி காமகோடி பீட சுவாமிகளின் அருளாசியுடனும் சித்திரபானு வருஷம் சித்திரை மாதம் 16ஆம் நாள் (29.04.2002) திங்கட்கிழமை பகல் மணி 11.14 மணிமுதல் 1.09 மணிவரையுள்ள கடகலக்கினமும், திருதியை திதியும், அஸ்வினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

சிவஸ்ரீ ஸ்கந்ததாசக்குருக்கள் தம்பதியினரின் பௌத்திரனும் எமது கனிஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி

**சர்வேஸ்வர சர்மா**

அவர்களுக்கும்



நயினை சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக் குருக்கள் தம்பதியினரதும் சுதுமலை பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமிக் குருக்கள் தியாகராஜ ஐயர் தம்பதியினரது பௌத்திரியும் எமது ஏக புத்திரியுமாகிய சௌபாக்கியவதி

**காதம்பரி**

அவர்களுக்கும்

கன்னிகாதான, பாணிக்கிரண, மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் பந்துமித்ர ஸகிதம் வருகைதந்து வைபவத்தைச் சிறப்பித்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் : காலை 6.05 முதல் 7.05 மணிவரை மணமகனில்லத்தில்
வதூவரகிரகப்பிரவேசம்: (வரவேற்புபசாரம்) மாலை 4.00 மணி மணமகனில்லத்தில் வில்லூன்றிப்பிள்ளையார் கோவில், யாழ்ப்பாணம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

சிவஸ்ரீ ஸ்கந்த சச்சிதானந்தக்குருக்கள் பாலாம்பிகை தம்பதி,
வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் சீதாலக்ஷ்மி தம்பதி
அம்மன் கோயிலடி, சுதுமலை, மானிப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு)

(3255)

## சேவைநலம் பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது உடனாசிரியையாக, இணைப்பிரதி அதிபராக, எமது கல்லூரியில் இருபத்துமூன்று ஆண்டுகள் அரும்பணியாற்றிப் பல்வேறு துறைகளிலும் கல்லூரியின் மேம்பாட்டுக்கு இன்றியமையாதவராக உதவி நின்ற எமது கழக உறுப்பினர் திருமதி

**இந்திரகுமாரி சிவானந்தன்**

அவர்கள் தமது அறுபதாவது வயதில் 27.04.2002 சனிக்கிழமை முதல் 30 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். அன்னாரின் தன்னலமற்ற அரும்பணிகளைப் பாராட்டுவதுடன் அவர் நீடு வாழ்ந்து மேலும் பல துறைகளிலும் தமது சேவையை நல்கவேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

நலன்புரிக் கழகம,
யா/கோ.கி.க.,
கோப்பாய்.

(சி-21938)

உ

## அகவை அறுபது காணும் தம்பதிகளை வாழ்த்துகின்றோம்



சிவஸ்ரீ Dr.நா.சோமாஸ்கந்தக்குருக்கள்
ஸ்ரீமதி காஞ்சனா

ஆஸ்திரேலிய திருமணப் பதிவாளர், ஆஸ்திரேலிய சைவ மஹாசபை ஆலோசகர், சர்வதேச இந்துமத குரு, சுன்னாகம ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான ஸ்தானீகர், பேரறிஞர் **சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள் - காஞ்சனா** தம்பதிகளின ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியும் அவருடைய சமய, சமூக சேவைகளைப் பாராட்டுமுகமாக அமைவுறும் சிறப்பு கௌரவிப்பு விழாவும் இன்று (28.04.2002) ஞாயிற்றுக் கிழமை ஜேர்மன் வூப்பர் கலையரங்க மண்டபத்தில் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**மணிவிழா தம்பதிகளுக்கு சிவகாமி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரப் பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.**

பிரம்மஸ்ரீ ஞா.சபாரத்தினசர்மா-வடிவாம்பிகை தம்பதிகள்,
சிவஸ்ரீ கோபாலக்குருக்கள்-வைதேகி தம்பதிகள் *(மலேசியா)*,
பிரம்மஸ்ரீ வாசுதேவசர்மா, மாதினி, உமாபதி சர்மா.

*சிவன்கோயில்,*
*சித்தன்கேணி,*
*இலங்கை.*

(3118)

உ

**சுன்னாகம் கதிரமலைச் சிவ்ன் தேவஸ்தான ஸ்தானீகர்**
**"சிவாகம வித்வான்" டாக்டர் பிரம்மஸ்ரீ**
**நா.சோமாஸ்கந்தக்குருக்கள் -வத்ஸலா (காஞ்சனா)**

**தம்பதிகளுக்கு இன்று 28.04.2002 நடைபெற இருக்கும் சஷ்டியப்த பூர்த்தி சாந்திவிழாவின்போது பாசம் நிறைந்த மைத்துனர் பிரம்மஸ்ரீ ந.பத்மநாபசர்மா - விமலா தம்பதிகள் வாழ்த்தி ஆசீர்வதித்து மனமுவந்து வழங்கிய**

## மணிவிழா மங்கல வாழ்த்துமடல்

ஆன்மீகப் பயிர் வளர அகிலமே வியக்கும் வண்ணம்
தேன்போல சிவாகமங்கள் தெவிட்டாத உபநிஷதம்
வான் போற்றும் ஆகமத்தின் வளமான கிரியாபாகம்
ஊன் உருக உளமுருக உவந்து தந்தார் சோமாஸ்கந்தன்

சைவநெறி தழைத்தோங்கச் சால்புறும் வேதநெறி
வையகத்தில் வாழவைக்கும் வைதீக நெறியாளர்
கையதிலே விபூதி கடும் பிணிகள் தீர்த்து வைக்கும்
நையமனம் உருக்கிவிடும் நாயகனார் சிவபக்தி

கல்வியிலே உயர்ந்து நின்றார் கலைகளிலே வல்லவராம்
செல்வியருள் செறிந்திலங்கும் சோமாஸ்கந்த குரு
பல்விருஞ்சேர் சமூகசேவை பல்லோருக்கும் உதவும்
மெல்லியவாள் வத்ஸலாவும் மேவிடும் சோமாஸ்கந்தன்

சுருவில் நடராஜகுரு சோபிதம் சேர் யோகாம்பாள்
அருமைப் புதல்வியான அழகி வத்ஸலாவின் பதி
குருபரம்பரை தழைக்க சிவநெறி நீடு வாழப்
பெருந்தொண்டு செய்தார் குரு சோமாஸ்கந்தச் செம்மல்

கலாநிதிப் பட்டம் பெற்றார் கவினுறச் சேவை செய்தார்
கலைகளை வாழ வைத்தார் குருக்களாம் சோமாஸ்கந்தர்
நிலாமதியன்ன முகம் நித்திலச் சிரிப்பினெழில்
உலா பல நாடுகளில் உயர் சேவை பக்திதனில்

எல்லோருக்கும் உதவும் நெஞ்சம் எழில்மிகும் கருணையோடு
பல்லோர்க்கும் அன்பினாலே பாலிப்பார் சோமாஸ்கந்தன்
நல்லாளாம் வத்ஸலாவும் நாயகனோடு வாழ்வில்
நல்லாசித் தொண்டு செய்து நானிலம் போற்றிவாழி

சிவநெறியும் அறநெறியும் செய்தே என்றும்
புவனியிலே பல்லாண்டு வாழி வாழி
அவனியிலே சோமாஸ்கந்த தம்பதிகள்
கதிரமலைச் சிவனருளால் நீடூழி வாழி வாழி

*குடியிருப்பு,*
*சுழிபுரம்.*

பிரம்மஸ்ரீ ந.பத்மநாபசர்மா ஸ்ரீமதி விமலா தம்பதிகள்

மற்றும் பணிவுடனும் வணக்கத்துடனும் நல்லாசியை வேண்டி நிற்கும்: பிள்ளைகள், மருமக்கள்:
பிரம்மஸ்ரீ ப.விமலநாதசர்மா உமாமகேஸ்வரி தம்பதிகள் (வவுனியா),
பிரம்மஸ்ரீ ப.பாஸ்கர சர்மா கோமதி தம்பதிகள் (சுவிஸ்),
சிவஸ்ரீ ச.மு.ரவிக்குருக்கள் பத்மஜா தம்பதிகள் (சுழிபுரம்),
பிரம்மஸ்ரீ யோ.யோகரஞ்சன் சைலஜா தம்பதிகள் (பிரான்ஸ்).

(3123)

*ஆக்கம்: கவிமாமணி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைமாதச் சிசுப்பிறப்புகள் அதிகரிப்பு! போர் அனர்த்தம் விளைவித்த ஆபத்து!!

டாக்டர் சி.நவநீதன்
மகப்பேற்று நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை

**போர்** விளைவிக்கும் அனர்த்தங்கள் பல. அவற்றுள் சில விளைவுகளை நேரடியாகக் காணக்கூடியவை. பல உடனடியாகப் புலப்படாதவை. ஆனால் இவை பாரிய தீயவிளைவுகளை ஏற்படுத்த வல்லது. கர்ப்பிணிகள், தாய்மார்கள் மீது போர் ஏற்படுத்தும் தாக்கம் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை.

குடாநாட்டில் நிறைகுறைவான, குறைமாதக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதன் பாதகமான விளைவுகள் பல சந்ததிகளுக்குத் தொடரலாம் என்பது கவலைதரும் உண்மை. போர் நிகழ்வுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசம் அதிசிறந்த சுகாதார வசதிகளுடன் திகழ்ந்தது. யுத்தசகாப்தத்துக்கு முன்னைய காலங்களில் யாழ்ப்பாணம் சுகாதாரத் துறையில் வெகுநலம் வாய்ந்த சேவைச் செயற்பாடுகள் கொண்டிருந்ததென்பது புள்ளி விவரங்கள் புலப்படுத்தும் உண்மை. உன்னத மருத்துவ வசதிகள் பெறும் நோக்கில் (உதாரணமாக இதய சத்திர சிகிச்சைக்காக) தெற்கிலிருந்து பல நோயாளிகள் இங்கு வந்துள்ளமையும் உண்மையே. வடக்கின் சுகாதார வளம் யுத்தத்தால் வெகுவாகப் பாதிப்படைந்தது.

யாழ்ப்பாணத்தில் போர் நிகழ்வுக்கு முன்னர் நிறைகுறைவான பிரசவ வீதம் 10 வீதமாக இருந்தது. இது போர்க்காலத்தில் 17 வீதமாக அதிகரித்துள்ளது. தேசிய மட்டத்தில் குறைவான பிரசவ வீதம் 16 வீதம் ஆகும். வளர்சியுற்ற நாடுகளில் இது 5 சதவீதமே ஆகும். இந்நோக்கில் யாழ்ப்பாணத்தில் பிறக்கும் 6 குழந்தைகளில் ஒன்று நிறைகுறைவாகப் பிரசவமான குழந்தையாக இருக்கும். இதுதவிர சாப்பிறப்பு எனப்படும் இறந்து பிறக்கும் வீதம் 12இல் இருந்து 20 ஆக அதிகரித்துள்ளதென்பதும் கவனித்தற்பாலது. (இதன் தேசிய வீதம் 15ஆகும்) இன்னும் மகப்பேற்று மாதர் இறப்பு வீதமும் 5இல் இருந்து 15 ஆகக் கூடியுள்ளது. இனி சில இறப்புகளின் வீதம் தெரிவிக்கப்படுவதில்லை. அவற்றையும் சேர்த்து பார்க்குமிடத்து இறப்புத் தொகை மேலும் மோசமானதாகலாம். இப்பிரமிப்பான தொகை, சுகாதார வசதிகள மிகுதியாகவுள்ளதாகச் சொல்லபடும் அரச கட்டுப் பாட்டுப் பகுதிகள் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கவை.

### குறைப் பிரசவம்

2.5 கிலோவிலும் குறைவான நிறையுடன் ஒரு குழந்தை பிறக்குமிடத்து அது குறைவான நிறைக் குழந்தையெனக் கருதப்படும். குழந்தையின் குறைவான பிறப்பு நிறைக்குக்காரணங்கள் போதியபோசாக்கு இன்மை, குறைமாதப் பிரசவம், சிறிய உடற்கட்டு நிலை(பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே சிறியவராய இருத்தல்) ஆகியவையாக இருக்கலாம். இவற்றுள் முதல் இரு காரணங்கள் நோயியல் சம்பந்தமானவை. அதாவது, இவை உடனடியாக அல்லது நெடுங்காலப் பாதிப்பு நிலைக்கு உளளாகலாம். நிறை குறைவான நிலைப பரசவக் குழந்தைகள் நோய்த் தொற்றுகள், சுவாசப்பை, குடல், மூளை, இரத்தப்பெருக்கு சார் நோய்களுக்கு ஆட்படும் வாய்ப்புண்டு. இக்காரணங்களினால் இவை சிசுப் பருவத்திலேயே இறக்கும் ஆபத்து உண்டு. மேலும் காலப் போக்கில் இக்குழந்தைகளின் மனவளர்ச்சி பாதிப்படையலாம்.

### 'பார்க்கரின்' கோட்பாடு

அண்மையில் மேலை நாட்டு விஞ்ஞானியொருவர் நிறைகுறைந்த குழந்தைப்பேறு ஏற்படுத்தவல்ல நெடுந்தவணைத்தாக்கம் பற்றி ஒரு கோட்பாட்டினை வெளியிட்டிருந்தார். "நிறை குறைவான பிறப்புடைய குழந்தைகள், நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் ஆகிய முதுபருவ நோய்களுக்கு ஆட்படும் ஆபத்துக்குள்ளாகும் வாய்ப்புண்டு", என்னும் கருத்தை வெளியிட்டுள்ளார். மேலும் இத்தகைய குழந்தைகளின் வாழ்நாள் ஏனைய குழந்தைகளின் வாழ்நாளைவிட குறுகியதாக அமையலாம் எனபது அண்மைக்கால ஆய்வில் கண்ட கருதுகோளாகும். குறைவான நிறைப்பேற்று குழந்தைகளின் வாழ்க்கை நோய்களின் நிலைப்பாட்டைக் கொண்டதாகவே இருக்கும் என்பது இதன் தாற்பரியமாகும். தற்போதைய புள்ளி விவரத்தின்படி, வடபிரதேசத்தில் உள்ள மக்களதொகையில் 30 சத வீதத்தினர் சில தசாப்பங்களில் இந் நோய்களுக்கு ஆளாகும் ஆபத்துண்டு.

### காரணம் என்ன?


நிறைகுறைவான பிள்ளைகள் பிறப்புக்கு காரணம் குறித்த குழந்தை அல்லது தாய் காரணமாகலாம். தாய்சார் நோய்கள், போதைப் பொருள் பாவனை, இரத்தச்சோகை, போஷாகக் குப் பற்றாமை, புகைத்தல், கருநிலை நோய்த் தொற்று என்பன நிறைகுறைந்த குழநதைப்பேற்றுக்குக் காரணங்களாக அமையலாம்.


இப்பிரச்சினைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படாமை துரதிஷ்டவசமானது. மேலும் இது சம்பந்தமான காரணங்களை இனங்காணற் பொருட்டு தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையும் விசனம் அளிப்பதாகும். சுகாதார பீடங்களும் இப்பிரதேசத்தில் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இது தொடர்பில் பார்வை செலுத்தாது இருப்பதும் வியப்பே.

சுகாதார வசதிகளில் ஒட்டு மொதத்தக் குறைபாடே தாய், கருநிலை ஆரோக்கிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணி என்று கருதப்படுகிறது. வடகிழக்கு சுகாதார சேவைகள் பொருட்டு ஒதுக்கப்படும் நிதி ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் தொகையை விட குறைவானது என்பது யதார்த்த நிலை. மக்களின் ஆரோக்கிய நிலை அந்த உண்மையை பிரதிபலிப்பதாய் உள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்மூலம் மலேரியா, குறைப்போஷாக்கு, இரத்தச்சோகை ஆகியவற்றால் பீடிக்கப்பட்டோரில் கணிசமானோர் நிறை குறைவான பிறப்புடையோர் என்பது தெரியவந்தது. மேலும் இடம்பெயர்ந்த மக்கள் தொகையினருள்ளும நிறை குறைவான குழந்தை பிறப்பு நிகழ்வுகள் கணிசமாக இடம்பெற்றிருந்தமையும் கவனிக்கப்பட்டுள்ளது.


துரதிஷ்டவசமான நிறைகுறைவான குழந்தைப்பேறுபற்றி முன் கூட்டியே கூறுவது இயலாது. அவ்வாறு இனம் காணப்படுமிடத்தும் திருப்திகரமான சிகிச்சை அளித்தல் இயலாது. குறைமாதப் பிரசவக் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு போதிய வசதிகள் இல்லாமையால், பிறந்ததும பல குழந்தைகள் இறந்துவிடுகின்ற நிலையும் உண்டு. யாழ்ப்பாணம் அரசினர் பொது வைத்தியசாலையில் மாதம் ஒன்றுக்கு குறைந்தது 350 பிரசவங்கள் இடம்பெறும் நிலையில் "சிசு பேணற் பேழை" (NICUBATOR) அண்மைக் காலம்வரை ஒன்றுதானும் இல்லாத அவல நிலையில் இருந்தது பல குழந்தைகளை இரட்சிக்கமுடியாது போயிற்று.




## போதியளவு மீன் உணவு கர்ப்பிணிகளுக்கு அவசியம்

சமீப காலத்தில் டென்மார்க்கில் வெளியிடப்பட்ட ஆய்வு, போதியளவு மீன் உணவு உட்கொள்ளாத தாய்மார் குறைமாத நிறைகுறைவான குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர் என்று புலப்படுத்தியுள்ளது. தாய்மை அடைந்திருக்கும் ஒரு பெண்ணுக்கு மீன் உணவு, கொழுப்பமிலங்கள் செறிந்த விசேட போஷாக்காகும். வடகீழ் பிரதேச மக்கள் மீன் பிடிப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடை காரணமாக மீன் உணவு இன்றி இடர்ப்பட்டது வெளிபபடை.




### செய்யத்தக்கது யாது!

சமாதானத்துக்கான நம்பிக்கை வலுவடைந்து வருகிறது. ஆனால் சேதங்கள் ஏலவே இழைக்கப்பட்டுள்ளன. நிறை குறைவான பிறப்புடைக் குழந்தைகளை செவ்வனே கண்காணிப்பதும், இவ்வாறான நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைக் குறைப்பதுமே செய்யத்தக்கவை. முன்னர் குறிப்பட்டவாறு இப்பிரச்சினைக்குரிய காரணத்தைக் கண்டறிதற்கு ஏற்ற ஆய்வுகள், தேடுதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தாய்மையடைந்துள்ள அன்னையரின் உடல் நலம் பேணுவதற்கு உகந்த ஆதரவை சுகாதார அதிகார பீடமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அளிப்பது அவசியமாகும். சுகாதாரப் பணியாளர்கள், தாய்மார்கள் என்போரிடையே இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இன்றியமையாததாகும். ☆

---

# இடம்பெயர்ந்தோர் விவரம் பதிவுசெய்யும் பணி துரிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்ற மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சும், யு.என்.எச்.சி.ஆர். அமைப்பும் இணைந்து இப்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றன.

பதிவுகளை மேற்கொண்டு வருகின்ற கணக்கெடுப்பாளர்களுக்கு அமைச்சின் பிரதிநிதிகளாலும், புள்ளி விவரத் திணைக்களத்தின் தலைமை அலுவலக அதிகாரிகளினாலும் அண்மையில் பயிற்சி வழங்கப்பட்டமை தெரிந்ததே.

மேற்படி பதிவுகள் யாவும் மே மாதம் 5ஆம் திகதியுடன் பூர்த்தியடையவுள்ளதால், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் கணக்கெடுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு இடம்பெயர்ந்த மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் நான்கு பிரிவுகளாகப் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன:-

☆ இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்துவருவோர்.

☆ உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருவோர்.

☆ மீளக்குடியமர்ந்து உலர் உணவு நிவாரணம் பெறுவோர்.

☆ 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் பின்பு மீளக்குடியமர்ந்தவர்கள்.

(எ-10)

### ஊக்குவிப்பு படி அதிகரிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாதர் அபிவிருத்தி பயிற்சிநெறியில் ஈடுபட்டுள்ள பயிலுநர்களுக்கு வழங்கப்பட்டுவந்த ஊக்குவிப்புப் படி 30 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக நாளொன்றுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஓ-100)

# ஜே.வி.பியினரிடமிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகள் ஏலத்தில் விற்பனை

ஜே.வி.பியின் கிளர்ச்சிக் காலத்தில், கிளர்ச்சியாளர்களிடமிருந்து இராணுவத்தினர் மற்றும் பொலீஸாரால் மீட்கப்பட்ட தங்க நகைகளை ஏலம் மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி நிதி அமைச்சர் பந்துல குண [illegible]

1988ஆம் ஆண்டுக்கும் 1991ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஜே.வி.பியினர் நடத்திய கிளர்ச்சியின் போது, அவர்களால் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பெருமளவிலான தங்க நகைகள், கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்ட சமயத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலீஸாரால் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த நகைகளே தற்போது ஏலத்தில் விற்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் பணம் அரசு நிதியில் சேர்க்கப்பட உள்ளது.

(ஓ)

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மழையால் மலேரியா ஆபத்து

கொழும்பு,ஏப்.28

வடக்கு - கிழக்கில் மலேரியா பரவும் ஆபத்து சமீப நாள்களாக பரவலாகப் பெய்துவரும் மழை காரணமாக அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் பெரிய அளவில் தென்படுவதாகவும் -

அது நாட்டின் மற்றைய, குறிப்பாக வடக்கு-கிழக்கை அண்டிய பகுதிகளுக்கும் பரவலாம் என சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்துகிறது.

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. எனவே பொதுமக்கள் இந்த நோய்கள் தங்களைப் பீடிக்காத வகையில் விழிப்புடன் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், இத்தகைய நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு சுகாதாரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவுக்கு எதிரான தீர்மானம் குறித்து தமிழகத்தில் எழுகின்ற விமர்சனங்கள்

## ஊழல் முத்திரையை அழிக்க நாடகமாடுகிறாராம் ஜெயலலிதா

சமீபத்தில் தமிழக சட்டசபையில் புலிகள் தொடர்பான - புலிகளின் தலைவர் தொடர்பான - பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பிரேரணையின் அடக்கம், அதை சமர்ப்பித்தமையால் ஏற்பட்ட தாக்கங்கள் என்பவை குறித்து பல்வேறு



அரசியல்வாதிகள், அறிஞர்கள் கூறுவதை விவரிக்க முன்னர் அந்தப் பிரேரணையை சமர்ப்பித்த கதாநாயகி யார் என்பதை அறிவது அதன் நோக்கம் குறித்து தெளிவடைய உதவும்.

ஜெயலலிதா - ஒரு காலத்தில் வாழ்க்கையையே நடிப்பாகக் கொண்ட நாயகி. அன்று சினிமாவினால் பலரின் தூக்கத்தைக் கெடுத்தவர், இன்று பிரேரணை மூலம் ஈழத்தமிழரின் நிம்மதியைக் குலைக்கின்றார். இங்கே நிம்மதிக் குலைவு ஏற்பட பிரேரணை முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பமே காரணமாகிறது.

35 வயது மகனை தத்தெடுத்து அவருக்கு திருமணத்தை 'ஓஹோ' எனப் பிறர் மூக்கில் விரலை வைக்குமளவிற்குச் செய்து முடித்தவர் ஜெயலலிதா. 'குப்பைத் தொட்டிக்கு' 'சென்ட்' அடித்தது போன்ற நிகழ்வுக்கு விரயமான பணம் எக்கச்சக்கம். இவ்வளவிற்கும் அவர் பெற்ற சம்பளம் வெறும் ஒரு ரூபாய் தானாம். வியப்பு - மந்திரத்தால் இனி மாங்காய் விழுத்தலாம்.

நடிகையாகி உழைத்துக் கொட்டியவர் அரசியலில் பிரவேசித்தார். பாதணிக்கே 'பட்ஜெட்' போடவைத்த பெரும்புள்ளி; பல ஊழல் குற்றச்சாட்டுக்களிலும் மாட்டுப்பட்டார். ஆனால், எப்படியோ வெளியே விடுதலையாகி வரும் யோகம் அவருக்கு இருந்தது. வந்தார். அரசியலில் கால் பதித்தார். பெருவெற்றி பெற்றார். தமிழகத்தின் முதலமைச்சரானார். இன்று அவர் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் குமுறும் மனங்கள் ஏராளம். அதற்கு செல்வியை திருப்திப்படுத்த ஏங்கும் உள்ளங்களும் தாராளம். அவர் முன் வைத்த பிரேரணை என்ன? அதனால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் எவை?

### பிரேரணை என்ன?

இலங்கை கடந்த பல தசாப்தங்களாகப் போரினையே வாழ்வாக கொண்டிருந்தது. அவலங்கள் சூழ்ந்த பிரதேசமாக - மரணங்கள் மலிந்த பூமியாக - காட்சி தந்தது. குறிப்பாக வடக்கு-கிழக்கே துயர தேசமாகியது. மூன்று வருடங்கள் நீடித்த 'ஜெயசிக்குறு'வை மூன்று வாரங்களுக்குள் அடக்கிய புலிகளை மீண்டும் சண்டைக்கிழுத்து மேலும் அழிவைத் தேடி... என வந்த காலப்பகுதியிலேயே தேர்தலும் வந்தது.

குண்டு வெடிப்பிலே காயத்தைச் சுமந்து அனுதாபங்களால் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட சந்திரிகாவிற்கு இம்முறை பிரசாரத்திற்கு வழி தென்படவில்லை.

போரின் மூலமே தீர்வு எனக் கூறி இனவாதக் கருத்துக்களை விதைத்துத் தள்ளினார். அதற்கு ஜே.வி.பி, சிஹல உறுமய போன்றன தோள் கொடுத்தன. முடிவு இனவாதக் கருத்துக்கள் தோல்வியைத் தழுவின. ரணில் விக்கிரமசிங்க பெருவெற்றியடைந்தார்.

தேர்தலில் வெற்றிபெற்ற ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சியில் இறங்கினார். உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. சமாதானததிற்கான கீற்றுக்கள் தென்பட்டன. 'யுத்தம் மூலம் முடியாத காரியம் யுத்த நிறுத்தம் மூலம் சாதிக்கப்பட்டது' என்ற எண்ணக்கரு அனைவரின் மனதிலும் விதைத்த வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

பாதை திறப்பு சமாதானத்தின் நகர்விற்கு படிக்கல். அரசு - புலிகள் உறவு சுமுகமாகிக் கொண்டு சென்றது. பேச்சுக்களுக்குக்கூட இடம் குறிக்கும் அளவிற்கு முன்னேற்றம் காணப்பட்ட சந்தர்ப்பம் பார்த்து ஓர் அரசியல்வாதி நாடகமாடப் புறப்பட்டார். இந்த அமைதியான - சுமுகமான நிலைப்பாட்டை மாற்றியமைக்க புலிகள் தொடர்பான பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

### ராஜீவ் கொலை

1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகளும் தலைவர் பிரபாகரனும் தொடர்பு கொண்டுள்ளார் என்பதை அந்நாடு உறுதியாக நம்பியது. இதன் பிரகாரம் 1991 - 92 காலத்தில் தமிழக அரசின் தொடர்முயற்சி காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளை 1967 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் மத்திய அரசு தடைசெய்தது. அத்துடன் 2002 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் நடந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகின்ற இக்காலப்பகுதியில் வன்னியில் நடந்த பிரமாண்டமான பத்திரிகையாளர் மாநாடு செல்வி ஜெயலலிதாவின் கண்ணைக்குத்தியிருக்க வேண்டும். அவரின் குறுக்கு மூளை வேலை செய்தது. இதனாலேயே பிரேரணை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டார். இப்பிரேரணைக்கு அரிச்சுவடி இட்டவர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.இளங்கோவன். இவர் "விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் இலங்கையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கின்றார். எனவே, அவரைக் கைது செய்து இந்தியாவிற்கு கொண்டுவர மத்திய அரசை நாம் கோரவேண்டும்" என்று குரல் எழுப்பினார். பத்திரிகையாளர் மாநாட்டினால் சர்வதேசத்தை ஈர்த்துக்கொண்ட பிரபாகரனை வைத்துப் பிரபல்யம் தேட முனைந்த ஜெயலலிதா, இளங்கோவனின் கூற்றை பிரேரணையாக்கினார்.

இதற்கு முன் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமியும் இதேபோன்ற அறிக்கை ஒன்றை உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியிடம் விடுத்திருந்தார். அதற்கு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய ராஜ்ய சபையில் பேசிய அத்வானி "பிரபாகரனை நாடு கடததித் தருமாறு இலங்கையை மத்திய அரசு கேட்டிருக்கின்றது" என்று தெரிவித்தார். இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் தெரிவித்த போது அச்சந்தர்ப்பத்தில் லண்டனிலிருந்து வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் உடனடியாக நாடு திரும்பி நாடுகடத்தும் செய்தி தொடர்பாக இங்குள்ள இந்தியத் தூதரை அணுகி விவரம் தரப் பணித்தார். இதேவேளை, அத்வானியின் பேச்சு இலங்கை ஊடகங்களில் பிரபலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நாடுகடத்தல் செய்தி தொடர்பாக அப்போதைய இலங்கைப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை செய்தியாளர்கள் அணுகி "பிரபாகரனை நாடு கடத்துவீர்களா?" என்று கேட்டனர். அதற்கு "அத்தகைய கேவலமான செயலை நாம் ஒருபோதும் செய்யமாட்டோம்" என்று பதிலளித்தார். அத்துடன் நாடுகடத்தும் கதைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அத்வானியின் விளக்கத்தை பத்திரிகைக்காரர் தவறாகப் பிரசுரித்துவிட்டார்கள் என்றும் கதை கூறப்பட்டது.

இவ்வாறு கடந்துபோன காலங்களின் நிகழ்வுகள் கழிந்துபோக புதிதாக முளைத்துக்கொண்ட "புதிய மொந்தையில் பழைய கள்ளு" என்றபடி பல்வேறு பக்கங்களிலிருந்தும் அபிப்பிராயச் சீறல்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்தியாவின் ஒத்துழைப்பு இல்லாமல் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இல்லை என்னும் கருத்து அனைவரது மனங்களிலும் ஆழமாக வேரூன்றியுள்ள நிலையில் இந்தியாவின் ஒத்துழைப்பை பல்வேறு அமைப்புகள் கோரியிருந்தன.

உதாரணமாக இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இந்தியாவின் தார்மீக ஆதரவு வேண்டும் என்று வாஜ்பாய்க்கு வடபிரதேச இந்துப் பேரவை அனுப்பிய மகஜரில் இலங்கைத் தமிழர் விடயத்தில் கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து புதியவைகள் நல்லவையாக அமைந்து அரசு - புலிகள் உறவு சீரடைந்து பேச்சுகள் சுமுகமான முறையில் நடைபெற இந்தியா பூரண ஆதரவு நல்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு இலங்கையில் சமாதான நிலைக்காக ஏங்கி நிற்கும் இக்காலப் பகுதியில் ஜெயலலிதாவின் பிரேரணையானது ஆதரவு பெற்றுள்ளது என்பதைவிட கடும் எதிர்ப்புக்குள்ளாகியிருககிறது என்பதே அவதானிகள் கருத்து.

### மாறிய அனுதாபம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தமிழ்நாட்டு மக்கள் கொண்டிருந்த அனுதாபமும் ஆதரவும் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின் மாறிவிட்டது. இச்சம்பவத்திற்குப் பிரபாகரனே பொறுப்பு என்பதிலிருந்து மக்கள் அச்சம் கலந்த வெறுப்பைக் காட்டுகின்றார்கள்.

தமிழ் நாட்டு மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கும் தமிழக அரசு, இச்சம்பவம் முதல் தனது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்துவருகின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள மாறுபடும் சூழ்நிலை வரவேற்கத்தக்கது. அது எல்லோருக்கும் மகிழ்ச்சி. இதனால் அகதி வாழ்வு மேற்கொள்ளும் பலர் தம் உறவுகளுடன் வாழ வழி கிடைக்கும் அதேநேரம் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் இறை யாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் இந்திய மண்ணில் கால் ஊன்றுவது ஒருபோதும் ஏற்கப்பட முடியாது.

இதற்கிணங்க ராஜீவ் கொலை வழக்கின் முதல் குற்றவாளியான பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கு இலங்கை அரசோடு சட்டப்படியாகவும், தூதரக நடைமுறைப்படியும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரபாகரன் புரிந்த குற்றங்களுக்கு இந்தியாவிலுள்ள நீதிமன்றத்தில் உரிய விசாரணைக்கு உட்படுத்த வேண்டும என்று தமிழக சட்டப்பேரவை மத்திய அரசை கேட்டுக் கொள்கின்றது.

இலஙகை அரசினால் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயலவில்லையென்றால் இலங்கை அரசின் அனுமதியோடு இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனை [illegible] உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசை தமிழக சட்டப்பேரவை கேட்டுள்ளது. இதுவே தமிழக சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் சாரம்.

இத்தகைய பொருள் பொதிந்த பிரேரணைக்கு அதரவாக இந்திய மத்திய அரசு பிரபாகரனை கைது செய்யுமாறு இலங்கை அரசைக் கோரவேண்டும் என்ற தீர்மானம் பாண்டிச்சேரி சட்டப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டதுடன் அம்மாநிலத்தின் முதலமைச்சர் என். ரங்கசாமி விடுதலைப் புலிகளின் எச்செயற்பாட்டிற்கும் தமிழக அரசு ஆதரவு அளிக்கக்கூடாதெனவும் - அன்ரன் பாலசிங்கத்திற்கு மருத்துவ உதவி அளிக்கும் செயற்பாடு வேதனைக்குரிய தென்றும் - கருத்துத் தெரிவித்தார்.

வாழப்பாடி ராமமூர்த்தி கருத்து தெரிவிக்கும் போது - பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டுவரக் கோரி காங்கிரஸார் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தார். தானும் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தார். அத்துடன் ஜெயலலிதாவிற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டு வரக்கோரி பாண்டிச்சேரி சட்ட சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பாரதீய ஜனதாவும ஆதரித்து வாக்களித்தன. திராவிட முன்னேற்றக் கழகம் நடுநிலை வகித்தது.

### எதிர்ப்புகள்

இவ்வாறு ஜெயலலிதா முன்வைத்த பிரேரணையை ஆதரித்து ஒரு சில கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைத்தபோதும் கண்டித்து முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஆதரவுக் கருத்துக்களை ஊதித் தள்ளுவனவாக அமைந்தன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி குறிப்பிடும் போது - 'பிரபாகரனைக் கைது செய்யக்கோரிய பிரேரணை மீதான வாக்கெடுப்பை எதிர்த்து கம்யூனிஸ்கள், பா.ம.க. போன்ற கட்சிகள் வெளிநடப்புச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. இதை தி.மு.கவும் எதிர்த்திருக்க வேண்டும். ஆனால், நடுநிலை வகிப்பதாகக் கூறியிருப்பது வரலாற்றுப் பிழையாகும். உலகத் தமிழர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தி.மு.க., இந்தத் தீர்மானத்தை எதிர்க்காமல் இருப்பது ஈழத் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட துரோகம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழகத்தில் இன உணர்வை அடக்க முயற்சித்தால் அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும் என்று ஜெயலலிதாவிற்கு எச்சரிக்கை விடுத்த வை.கோ, தொடர்ந்து கூறுகையில் ஈழத்தமிழர் பிரச்சினை எவ்வாறு உருவானது என்று என்னோடு ஆரம்பத்திலிருந்து விவாதிக்கத் தயாரா? பழைய சம்பவங்களை கிளற வேண்டாமென்றா. ஒட்டுமொத்தமாக பழைய சம்பவங்களைக் கிளறக் கூடாது. ராஜீவ்காந்தி படுகொலை ஒரு துன்பியல் நிகழ்வுதான். ஆனால், தற்போது அனைத்து அமைப்புக்களும் விடுதலைப் புலிகளின தலைமையில் ஒன்றுதிரண்டு ஒற்றுமைக்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அதைக் குழப்ப முனையாதீர்கள்.

**இதயநிலா**

ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதா வெற்றிபெற்ற உடனே இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், இன்று இத்தீர்மானத்திற்கு ஆறுகோடி தமிழர்களும் எதிர்ப்பாக மாறும் நிலையல்லவா தோன்றியுள்ளது.

பின்லேடனுடன் பிரபாகரனை ஒப்பிடாதீர்கள். நேதாஜி தனிப்படையையே நடத்தினார். அது விடுதலைக்காக என்றால் இதுவும் அப்படித்தான் என்று முழங்கினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஜெயலலிதாவின் தீர்மானத்தை இந்திய அரசாங்கம் நிராகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சட்ட சபை பிரேரணைக்கு நடுவு நிலைமை வகிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்ட தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கருத்துவெளியிடுகையில் - "தமிழ் நாட்டுப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பவே பிரபாகரன் குறித்த பிரேரணை மூலம் நாடகமாடுகிறார் ஜெயலலிதா" என்று குறிப்பிட்டதுடன் "1990 காலப்பகுதியில் ஈழத் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே" என்றும் 'புலிகள் ஒழிந்தால் தமிழினமே ஒழிந்துவிடும்' என்றும் பங்களா



தேஷில் இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கைபோன்று இலங்கைக்குப் படைகளை அனுப்பி தமிழர்களுக்கு தனிநாடு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றும் முன்னர் பேசிய ஜெயலலிதா, இன்று தீர்மானம் நிறைவேற்றுவதாக தனது நடிப்பை வெளிப்படுத்துகிறார்' என்று குறிப்பிட்டார்.

பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில - '18 வருட சண்டை முடிவிற்கு வந்து சிங்களவ்போல தமிழர்களும் அனைத்து உரிமைகளையும் பெற்று அமைதியான வாழ்விற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளும் பாகிஸ்தானிய ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் போன்று சமநிலையில் ஆபத்தானவர்கள். லட்சக் கணக்கானவர்களைக் கொன்று குவிக்க காரணமானவர்கள் புலிகளே. இப்படியெல்லாம் தனது கற்பனை வளத்தை ஜெயலலிதா கொட்டியிருக்கிறார். இலங்கையில் நிகழும் அமைதிச் சூழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைகிறார் அவர், என்றும் குறிப்பிட்டார்.

இந்திய மத்திய நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கும் போது - 'விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேச ஜெயலலிதாவிற்கு தகுதி இல்லை'. தீவிரவாதத்திற்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகப் போராடுவது தீவிரவாதம் அல்ல. அது விடுதலைப் போராட்டம். விடுதலைப் புலிகள் தமிழர் பிரச்சினைகளுக்காகப் போராடி வருபவர்கள். கோடிக்கணக்கில் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளான, தற்போதும் வழக்கு நிலுவைகளை தன்வசம் கொண்டுள்ள ஜெயலலிதா, புலிகள் பற்றிப் பேச தகுதியற்றவர்' என்று கூறினார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் குறிப்பிடும் போது - 'ஜெயலலிதாவின் கருத்து சபைக்கு உதவாத பேச்சு. இலங்கை அரசே விடுதலைப் புலிகளை ஏற்று சமாதான முயற்சிகளுக்கான சமரசப் பேச்சுக்கு முன்வந்திருக்கும்போது ஜெயலலிதாவின் கருத்து நன்றாக அமையவில்லை. ஈழத் தமிழர்கள் மீது உண்மையான அக்கறை கொண்டிருந்தால இத்தகைய கருத்துக்களை பேசாமல இருப்பது நல்லது' என்று குறிப்பிட்டுள்ளார்.

### போராட்டங்கள்

மேலும் பிரபாகரனுக்கு எதிரான பிரேரணையின் நகல்களை தமிழகத

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் பாடசாலை நாளைமுதல் சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் நாளை திங்கட்கிழமை முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

மேற்படி பாடசாலையின் சகல ஆசிரியர்களும், மாணவர்களும் அன்றைய தினம் பாடசாலைக்குத் தவறாது சமுகந்தர வேண்டுமென வித்தியாலய அதிபர் எம்.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (எ)

## மேதினம் தொடர்பான கலந்துரையாடல்

மேதினக் கொண்டாட்டம் தொடர்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள விசேட கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களையும் சன சமூக நிலையங்களின் சமாசப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-10)

## பிரபாவுக்கு எதிரான...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் தலைநகர் சென்னையிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் எரிக்கும் போராட்டமொன்றை நடத்துவதற்கு பல கட்சிகளும், அமைப்புக்களும் முடிவெடுத்துள்ளன. இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனைப் பிடிக்கவேண்டும் என்ற தீர்மானம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் தீர்மானம் அல்ல என்றும் தமிழகத்தில் இனமான அமைப்புகள் பலவும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

திராவிடர் கழகச் செயலாளர் வீரமணி 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றித் தமிழக அரசு பரிசீலனை செய்யவேண்டும். ஈழத்தமிழர்கள், உலகத்தமிழர்கள், உள்ளூர்த் தமிழர்கள் உட்படப் பலரது பழியை - இருபது ஆண்டு கால ஈழத்தமிழர் வாழ்வுரிமைச் சிக்கல் தீரும் தறுவாயில் - தமிழக அரசு இந்தத் தீர்மானத்தால் சுமக்க நேரிட்டுள்ளது.அதனால் என்ன லாபம்? என்று கேட்டுள்ளார்.

### கண்டனங்கள்

இதேபோல பிரபாகரனைக் கைது செய்வது தொடர்பான பிரேரணைக்கு எதிராக ஜெயலலிதாவை இந்தியாவிலுள்ள ஒரு சில கட்சிகள் தவிர்ந்த ஏனையவை அனைத்தும் வன்மையாகக் கண்டித்தன. இந்தியப் பத்திரிகைகளும் காரசாரமாக விமர்சித்தன. அதுமட்டுமன்றி இலங்கையிலும் பல அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் தங்கள் கண்டனத்தை முன்வைத்ததுடன் கொடும்பாவி எரிப்பு நடவடிக்கையையும் மேற்கொண்டன. அத்துடன் சமாதான முயற்சிக்குக் குந்தகமாக இந்தியா ஒருபோதும் செயற்பட்டுவிடக்கூடாது என்று இலங்கையிலுள்ள இந்திய சமூகத்தினர் கேட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஜெயலலிதாவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதால் இப்போது 'ஆப்பிழுத்த குரங்காக' அவர் அவதிப்படுகிறார் என்பதே உண்மை. தன்னை எம்.ஜி.ஆரின் வாரிசு என தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் கொள்கைகளை உதாசீனப் படுத்திவிட்டுச் செயற்படுகிறார்.

"சுபாஸ் சந்திரபோஸை நாம் எவ்வாறு மதிக்கிறோமோ அவ்வாறே பிரபாகரனும்", "ஈழத்தமிழர்களின் கர்ப்பப்பையிலிருந்து தோற்றம் பெற்றவர்களே விடுதலைப் புலிகள்" என்று எம்.ஜி.ஆர். கூறிய வார்த்தைகளும், ஈழத்தமிழர்களின் தேசியத் தலைவர் என்று கருதி புலிகளுக்கு அவர் செய்த உதவிகளும் எவரும் மறந்திருக்க முடியாதவை. அவரின் வாரிசு என மார்தட்டும் ஜெயலலிதாவின் மாறாட்டப் போக்கிற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லை.

இலங்கையின் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளமைக்காக அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் பாராட்டுக்களைத் தெரிவிக்கும் இச்சமயத்தில், ஊழல் ராணி என்ற தனது 'பெரும் பெயரை' 'தீவிரவாதத்தை எதிர்க்கும் தியாகி' என்று மாற்றிக்கொள்ள ஜெயலலிதா ஆடிய நாடகமே சட்டசபைத் தீர்மானம் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆயினும் நாடகமே உலகம்,
நாளை நடப்பதை யாரறிவார்.

☆

ஓம்சக்தி

### யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான அறிவித்தல்

*அம்பிகை அடியார்களே!*

அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில் ஆலய அர்ச்சகர்கள் வரிசையில் சிவத்திரு நா.சிவதர்ஷன் ஐயா அவர்களின் பெயர் தவறுதலாக அச்சுப் பதிப்பில் இடம்பெறவில்லை; விடுபட்டுவிட்டது.

ஆகவே அவரது பெயரை அர்ச்சகர்கள், தர்மகர்த்தாக்கள் வரிசையில் சேர்த்து வாசித்துக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(3269) - தேவஸ்தானம்.

### விவசாய வார நாடகங்கள்

காலம் - இன்று (28.04.2002) ஞாயிறு பி.ப. 3.30மணி

இடம் - யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கு

அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (3264) - விவசாயபீட மாணவர் ஒன்றியம்.

### பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் மகமாஜி சனசமூக நிலைய முன்பள்ளி கட்டட நிதிக்காக இன்று நடத்தப்படவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*கொக்குவில்.* (3267) - நிலையத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு ஆராதனையும் நன்றி நவிலலும்

ஜனனம் 22 - 02 - 1967



துயில் 30 - 03 - 2002

### திருமதி றமிலா ஜேம்சன் அரசகேசரி

*அன்போடும் பண்போடும் பாரினில் வாழ்ந்து மறைந்த*
*உங்கள் அன்பு முகத்தை எம்மால் மறக்கமுடியுமா?*

அன்னாரின் நினைவு ஆராதனை நாளை (29.04.2002) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்றிருந்த காலத்திலும் கர்த்தருக்குள் நித்திரையடைந்த பின்னரும் எமக்குப் பல்வேறு வழிகளிலும் தோன்றாத் துணையாக இருந்து உற்றநேரத்தில் உதவிகள் பல புரிந்த அனைத்து அன்புள்ளங்கொண்டவர்களுக்கும் எல்லா நேரத்திலும் எம்மைத் தாங்கிப் பலப்படுத்திய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"புஷ்பவாசா",*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (3257) - குடும்பத்தினர்.


### தேவை

தரமான வேப்பம்பூ தேவை. கிலோ ரூபா 10.00இல் இருந்து ரூபா 15.00 வரை பூவின் தரத்தைப் பொறுத்து விலை கொடுக்கப்படும்.

அண்ணா தொழிலகம்
வன்னியசிங்கம் வீதி, இணுவில். (3157)

### லஷ்சுமி இணுவில்

2ஆவது வாரமாக
சரத்குமார், அபிராமி, கவுண்டமணி
சமுத்திரம் (பிலிம்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (ப.நே.) (3260)

### நாகம்ஸ் சுன்னாகம்

ஜனத்திரள் நிறைந்த
4ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
ரொப்ஸ்டார் பிரசாந்த்,
சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ் (பிலிம்ஸ்)
காட்சிகள்:11.00,3.00,6.30 (பு.நே.) (3244)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், ஷாலினி, ரகுவரன்
நடித்த
அமர்க்களம் (பிலிம்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-21732)

### ராஜா யாழ்ப்பாணம்

3ஆவது ஜனத்திரள் வாரம்
விஜய், பிரியங்கா சோப்ரா,
விவேக நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C/217..)

### கருத்தரங்கு

2002 APRIL
இரசாயனவியல்
ஆசிரியர் - Mr.B.BABU B.Sc. (Che.Sp.)
S.THOMAS COLLEGE
Mountlavinia
காலம் - 30.04.2002 8.00 a.m.
இடம் - NEW SCIENCE HALL, JAFFNA
குறிப்பு - Model Paperஐ 29.04.2002 கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும். (3262)


### பசு மாட்டைக் காணவில்லை

சிவப்பு நிறமுள்ள, அடிவயிற்றில் வெள்ளைப் புள்ளிகள் கொண்ட, சின்னப் பட்டிபார்த்த கொம்புடன் நிறைமாதக் கன்றுத்தாச்சிப் பசு மாட்டை, கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு.அ.செல்வரட்ணம்,
25/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம். (3265)

## மரண அறிவித்தல்கள்

### வைரவி சுபாஸ்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி சுபாஸ் 26.04.2002 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சரோஜாதேவியின் அன்புக் கணவரும், கார்வண்ணனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அச்சுவேலி வடக்கு,* சரோஜாதேவி (மனைவி)
*அச்சுவேலி.* (3261) கார்வண்ணன் (மகன்)

### திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா 26.04.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் கோகிலாம்மாள் (ஜேர்மனி), ராகவன் (ஜேர்மனி), இராசதுரை (சுவிஸ்), அருந்ததி அகியோரின் அன்புத் தாயாரும் கிருபாகரன், மாலினி, பாமினி, பரமேஸ்வரன் (அலுவலகப் பணியாளர் - தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யதுஷன், மிதுஷன், மிதுஷா, ரஞ்சித், சபேசன், சஞ்சயன், டிலாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.பரமேஸ்வரன் (பாபு)
*சிறுப்பிட்டி வடக்கு.* (C/21952) (மருமகன்)

### திருமதி அன்னம் வீரசிங்கம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம் வீரசிங்கம் 25.04.2002. வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கருணாவதி, யோகமலர், சந்தனரூபி (கொழும்பு), திருக்குமாரன் (U.K.), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிநாதன், வசந்தன், தேவதாஸ், திருமகள், ராசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பாக்கியலக்சுமி, குமரேசபிள்ளை, பரமசாமி, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55,வைமன் வீதி,* தகவல்:
*நல்லூர்.* (3266) பெறாமக்கள்.

### கந்தவனம் கணேசு

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ். கட்டைப்பிராயை வதிவிடமாகவும்கொண்ட நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், இளைப்பாறிய அதிபரும் (யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை) கந்தவனம் கணேசு அவர்கள் 25.04.2002 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - சின்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை லலிதாம்பாளின் (யாழ். புனித மரியாள் வித்தியாலயம்) பாசமிகு கணவரும் சுபாஷினி (ஆசிரியை, பம்பலப்பிட்டி றோ.க.த.பாடசாலை), சிறீரஞ்சன் (சுவிஸ்), ரஞ்சனி (ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வேஸ்வரன் (ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடில்லி), வதனி (சுவிஸ்), ஜோசப்பெனின்லஸ் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் நிஷா, கீதப்பிரியன், சங்கவி, அச்சுதன், நிருசனன், விதுர்ஷனன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் சிறிகாந்தன், காலஞ்சென்ற கனகராசா, கிருசாம்பாள் (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா கல்லூரி), சந்திரன் (லிகிதர், கட்டடங்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராஜி, ராசம்மா, நவரத்தினசிங்கம், நாகம்மா, மகேஸ்வரி, கனகசபாபதி, குகதாசன், சவுந்தரம், பராசக்தி, கமலாம்பிகை, பரமலிங்கம், மகாதேவா, நவரட்ணராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான காமாட்சி சுந்தரம், மகாலிங்கம், ராசரத்தினம், ஞானசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பொரளை பேணி ரேமண்ட் மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி லலிதாம்பாள் கணேசன்
(C/21954) (மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தொழிற்சங்கங்கள் இணைந்து
# இம்முறை கூட்டு மேதினத்துக்கு ஏற்பாடு

## மருதனார்மடத்தில் நடைபெறும்

வடபிரதேசத்தில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து கொண்டாடவுள்ள கூட்டு மேதினம் எதிர்வரும் முதலாம் திகதி மருதனார்மடத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3.30மணிக்கு இணுவிலில் உள்ள லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவனத்தில் இருந்து தொழிற்சங்கங்களின் கூட்டு ஊர்வலம் ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதியூடாக மருதனார்மடத்தைச் சென்றடையவுள்ளது. அங்கு மாலை 4மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

யாழ்நகரப் பகுதியில் இருந்து ஆரம்பமாகவுள்ள ஓட்டோச் சங்கத்தின் ஊர்வலமும் இணுவில் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ள கூட்டுறவாளர்களின் ஊர்வலமும் லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவனத்தைச் சென்றடைந்த பின்பே அங்கிருந்து கூட்டு ஊர்வலம் ஆரம்பமாகும்.

இந்த மேதினக் கூட்டத்தில் தமிழ்மக்களின் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாகவும் சகல தொழிற்சங்கங்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

கூட்டத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக்குழுவின் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகம், தொழில்நுடபக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொள்ளவுள்ள பொதுமக்களின் வசதிகருதி சகல வீதிகள் ஊடாகவும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-10)

## விபத்தில் யுவதி காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

பருத்தித்துறை மந்திகைச் சந்தியில் நேற்று சனிக்கிழமை மாலை இராணுவ பிக்கப் வாகனத்துடன் ஏற்பட்ட விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்தார்.

இடம்பெயர்ந்து குடத்தனை முகாமில் வசித்துவரும் அம்பன் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் தரணிகாதேவி (வயது 32) என்ற யுவதியே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய இவர் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விபத்துத் தொடர்பாக இராணுவப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9-117)

# அமைச்சர் சந்திரசேகரன் மீண்டும் வன்னி செல்வார்

கொழும்பு,ஏப்.28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பணிப்பின் பேரில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரன், விரைவில் திரும்பவும் வன்னிசெல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக அபிவிருத்தி அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றைச் சேர்ந்த தலா 5 அதிகாரிகளையும் அமைச்சர் தனனுடன் அழைத்துச் செல்லவுள்ளார்.

அவரின் வன்னி விஜயத்துக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குச் செல்லும் இவர்கள் அங்கு சமூக அபிவிருத்தி, விவசாய மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி என்பன தொடர்பாக விரிவாக ஆராய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னியில் உள்ள குளங்களைப் புனரமைப்பது குறித்தும் அவர்கள் ஆராய உள்ளதாகக் கூறப்பட்டது. (ம)

# வெளிநாட்டு நிதி உதவிகளை நேரடியாக இடைக்கால நிர்வாகத்திற்கு வழங்குக!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் ஐ.நா. குழுவிடம் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.28

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு மற்றும் உதவிப் பணிகளுக்கு ஐ.நா. மற்றும் வெளிநாடுகள் நிதி உதவிகள் வழங்கும்போது அவற்றை உத்தேச இடைக்கால நிர்வாகத்திடமே நேரடியாக வழங்க வேண்டும்.

- இவ்வாறு இலங்கை வந்துள்ள ஐ.நாவின் விசேட தூதுக்குழுவினரிடம் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பு எம்பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.இரவிராஜ், அ.விநாயகமூர்த்தி ஆகியோர் கடந்த வியாழனன்று மாலை ஐ.நா. தூதுக் குழுவைச் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடினர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்களின் மீள் குடியமர்வு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து இந்தக் குழு ஆராய்ந்து வருகின்றது.

குழுவினருடனான இந்தச் சந்திப்பில் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்களின் இடங்கள் ஆகியவற்றிலிருந்து இராணுவம் இன்னும் வெளியேறவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் பலவற்றில் மக்கள் இன்னும் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை -

என்பன போன்ற விடயங்களை கூட்டமைப்பினர் ஐ.நா. அதிகாரிகளுக்கு எடுத்துவிளக்கினர்.

அதேசமயம் -

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்குப் பகுதிக்கென வெளிநாடுகளால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. எனவே எதிர்காலத்தில் அவ்வாறு நிகழாமல் இருப்பதைத் தடுப்பதற்காக வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவுள்ள உத்தேச இடைக்கால நிர்வாகத்திடம் அத்தகைய உதவிகள்ள நேரடியாகவே கையளிக்க வேண்டும் என்று கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

இது தொடர்பாகத் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது புலிகளும் அரசும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று ஐ.நா. பிரதிநிதிகள் குழு கூட்டமைப்பினரிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (ம)

# 119 வருடச் சட்டத்தை நீக்க அரசு தீர்மானம்

கொழும்பு,ஏப்.28

அதிகாரத்தில் உள்ளோருக்கு அவதூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகக் குற்றவியல் (கிரிமினல்) சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வகை செய்யும் சட்டம் நீக்கப்படவிருக்கின்றது.

கடந்த 119 வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் இந்தச் சட்டத்தை நீக்குவது என அமைச்சரவை தீர்மானித்திருக்கின்றது.

நீதி அமைச்சர் லொக்குபண்டார இது பற்றிய தகவலை வெளியிட்டார்.

விரைவில் இந்த சட்ட நீக்கம் பற்றிய அறிவித்தல் ஸ்ரீலங்கா சட்டக் கோவையில் இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

உயர்மட்ட அரச அதிகாரிகளுக்கு எழுத்து மூலமும், பேச்சு மூலமும் அவதூறு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து இந்தச் சட்டத்தின்கீழ் பத்திரிகைகள், பொதுநல அமைப்புகள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக பொலீஸாரால் குற்றவியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, இச்சட்டத்தின் கீழ் குற்றவியல் தொடர்பான தண்டனைகளும் வழங்கப்பட்டு வந்தன. (உ-6-9)

# பிரபாவின் விவகாரத்தால் நேற்று புதுவை சட்டமன்றத்தில் அமளி

## 'மைக்' இணைப்புகள் துண்டிக்கப்பட்டன

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பான விவகாரத்தால் புதுவை சட்டமன்றத்தில் நேற்று பெரும் அமளி துமளி ஏற்பட்டது. கூச்சல் கட்டுமீறியதை அடுத்து சட்டப்பேரவை ஒலிவாங்கிகள் (மைக்குகள்) அனைத்துக்குமான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

"விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த எவரும் இந்தியாவில் கால்வைக்க அனுமதிக்கக்கூடாது. அந்த அமைப்பு மீதான தடையை இந்தியா ஒருபோதும் நீக்கக்கூடாது" - என்று தனிநபர் பிரேரணை ஒன்றை அ.தி.மு.க. உறுப்பினர் அன்பழகன் பேரவையில் சமர்ப்பித்தார்.

அதன் மீதான விவாதம் நடந்து கொண்டிருந்தபோது காங்கிரஸ் உறுப்பினர் கமலக்கண்ணன் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி கடுமையாக விமர்சித்தார்.

இதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் ஜெயக்குமார் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் இல்லாத ஒருவரைப்பற்றி இவ்வாறு அவதூறாகப் பேசுவது தவறு என்று அவர் குறிப்பிட்டார்.

உடனே, "உங்கள் தலைவரைக் கொன்றவர்களுக்காக வக்காலத்து வாங்குகிறீர்களே!" என்று கமலக்கண்ணன் குற்றஞ்சாட்டினார்.

இதற்கு "அவர்களை வளர்த்து விட்டவர்களே நீங்கள் தானே?" - என்று அவர் மீது பாய்ந்தார் ஜெயக்குமார்.

"நான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசவில்லை. அவர்கள் மீதான தடை நீக்கப்படக்கூடாது எனும் விடயத்துக்கு நான் முழு ஆதரவு தருகின்றேன். ஆனால் எமது நாட்டில் இல்லாத ஒருவரைப்பற்றி இவ்வளவு அவதூறாகப் பேசுவதைச் சகித்துக்கொள்ள முடியாது" - என்று தனது நிலை குறித்து விளக்கினார் ஜெயக்குமார்.

இந்த விவகாரத்தால் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. கூச்சலும் குழப்பமும் கட்டுமீறின. உடனடியாக சபை 'மைக்' இணைப்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன. இதனை அடுத்து சபை ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

# யுனிசெவ் நிறுவன உதவியுடன்
# வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் 70 மலசல கூடங்கள் அமைப்பு

யுனிசெவ நிறுவனத்தின் உதவியுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 70 மலசலகூடங்களும் மூன்று பொதுக்கிணறுகளும் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொன்றும் 15 ஆயிரம் ரூபா செலவிலான 60 மலசலகூடங்கள் தாவடி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலும், பத்து மலசலகூடங்கள் இணுவில் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுள் உடுவில் கிழக்கு, சுன்னாகம் தெற்கு, ஈவினை, புன்னாலைக் கட்டுவன் ஆகிய பகுதிகளில் உள்ள நான்கு பாலர் பாடசாலைகளின் பாவனைக்கான மலசலகூடங்களும் அடங்கும்.

பொதுப் பாவனைக்குரிய மூன்று கிணறுகளில் இரண்டு தாவடி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலும் இணுவில் வடகிழக்கு கிராம சேவையாளா பிரிவில் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றன. (ம-152)

---

### உணவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நச்சுத் தன்மையே இந்தப் பிரச்சினைக்குக் காரணம் எனக் கருதப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்காக மேஜர் ஜெனரல் டட்ளி பெரேரா தலைமையில் இருநபர் விசாரணைக் குழு ஒன்றை இராணுவத் தலைமைப்பீடம் நியமித்துள்ளது. (உ)

---

### சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பௌத்தர்களுக்கும், பௌத்த மதத்துக்கும் துரோகம் இழைக்கும் இந்தப் பேச்சுக்களை பௌத்த நாடான தாய்லாந்தில் நடத்த இடமளிக்கக் கூடாது என்று அந்த நாட்டின் அரசைக் கோரப்போவதாகவும் இந்தக் கட்சிகள் தெரிவித்தன. (உ-6-9)

---

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளையும் தற்போது நிறுத்திவிட்டார்கள். எனவே இப்போது அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூற முடியாது.

அவர்கள் அரசியல் நடவடிக்கைகளிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். இலங்கையின் வடக்கு - கிழக்கு நிர்வாகம் அவர்களின் கைகளில் சென்று சேரும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது" - என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையை அடுத்தே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பிரிட்டிஷ் அரசு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

புலிகள் மீதான தடையை பிரிட்டன் நீக்கினால் அதனைப் பின்பற்றி வேறு பல வெளிநாடுகளும் புலிகள் மீதான தடையை நீக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

---

### சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முன் முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் விரிவாக ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி குமாரதுங்க நாடு திரும்பியிருக்கின்றார்.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி குமாரதுங்க - பிரதமர் ரணில் சந்திப்பு இடம்பெறவிருப்பதால் அது முக்கியத்துவம் பெறுகின்றது என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில் -

தற்போதைய சமாதான முன் முயற்சிகளை ஆட்சேபித்துவரும் - தீவிர பேரினவாதப் போக்கைக் கடைப்பிடித்துவரும் - சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவும் ஜனாதிபதி குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப்பேசவிருக்கின்றது.

புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதைக் கடுமையாக எதிர்க்கும் இக்குழுவினர் தமது நிலைப்பாட்டைத் தென்பகுதிப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூற திட்டமிட்டிருக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகப் பெருத்த எடுப்பில் பிரசாரம் மேற்கொள்ளப்படும் என மேற்படி எம்பிக்கள் குழுவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (உ-6-9)


INFORMATION TECHNOLOGY PARK
272, Stanley Road, Jaffna, Sri Lanka
T-P: 021-3641 e-mail: itp@sltnet.lk
Practical Workshop on PC Hardware & Maintenance
1st W. Shop Mon-Wed 5-7 pm
2nd W. Shop Sat-Sun 2-4 Pm
Online Training on Web Page Designing
1st Batch Mon-Wed-Fri 5-7 pm
2nd Batch Sat-Sun 4-7 pm
Online Training on Internet Practical Workshop
1st Batch:Mon,Wed, Fri: 12.30 to 2pm
2nd Batch:Mon,Tue,Thu: 7.30 to 9 am
3rd Batch : Sat, Sun: 7.30 to10 am
4th Batch : Sat, Sun: 12 to 2.30 pm
Duration 1Month
Course fee 1000/=
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
ஆரம்பம்:03-05-2002
தகவல்:பணிப்பாளர்
மேலதிக விபரங்களிற்கு
அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்



கணக்கீடு
A/L 2003
உற்பத்திக்கணக்கு
ஆரம்பம்: நாளை 2.30 p.m.
NEW SCIENCE COLLEGE
நாளை மறுதினம் 8 a.m.
NIRU TUITION CENTRE
ஆசிரியர்: S.தவா
B.Com. (Hons) (Acc.Spl)
விடுமுறை கால நேர அட்டவணை
அந்தந்த அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளவும்.
(3368)



தேவை
எமது ஸ்தாபனத்திற்கு அனுபவம் உள்ள Sweet Maker தேவை.
லிங்கன் கிறீம் ஹவுஸ்.
119, கஸ்தூரியார் வீதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.